283

உ

இந்தியாவின் சுதந்தரப்போர்.

இஃது

“மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரமும் இந்தியாவும்”

“சபேசன் அல்லது சுதந்தர [illegible]”

ஆசிரியராகிய

V. N. அரங்கசாமி அய்யங்கார் எழுதியது.

[முதல் பதிப்பு 1,000.]

ஆரணி

திருநாவுக்க[illegible] அச்சக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

[illegible] 1922.

[இதன் விலை அணு 5.

V2:51
N22
175917

மகாத்மா காந்தியின் ஆத்மசக்தியை அறிய வேண்டுமானால்

"நிஷ்டாகாலத்தில் கண்ட அற்புதக்காக்ஷிகள்"

என்னும்

புஸ்தகத்தை வாசிக்கவேண்டும்.

ஆசிரியர்.—இலக்கிய இலக்கணங்களில் தேர்ந்த மகாவித்வான்

புஸ்தகத்தில் அடங்கிய விஷயங்கள்.

30 ஞானோதய உபதேசங்கள். இகபரசுகத்திற்கு ஆப்தநண்பன். ஆத்மக்யானம் அடைய இப்புஸ்தகமே சிறந்தமார்க்கம். பிறவித் துன்பங்களை யனுபவிக்கும் மாந்தர்களுக்கு சுகாம்ருதத்தைகொடுக் கக்கூடிய சஞ்சீவி. உயர்ந்த கடிதத்தில் வெகு சுத்தமாய் அச்சிடப் பட்டது.

விலை ரூபா 1—0—0.

வி. பி. செலவுடன் 1—6—0.

மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரமும் இந்தியாவும்.

மகாத்மா படத்துடன் 40 பக்கங்கள் கொண்டது. எளியநடை

விலை அணா 0—2—0

10 புஸ்தகங்கள்	ரூ. 1—0—0
100 புஸ்தகங்கள்	ரூ. 9—0—0

தபார்சார்சு பிரத்யேகம் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

☞ வேண்டியவர்கள் கீழ்க்கண்டவிலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

திருநாவுக்கரசு அச்சுக்கூடம்,

ஆரணி, (வட ஆற்காடு.)

உ

இந்தியாவின் சுதந்தரப்போர்.

இஃது
"மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரமும் இந்தியாவும்"
"சபேசன் அல்லது சுதந்தர ரக்ஷகன்."
ஆசிரியராகிய

V. N. அரங்கசாமி அய்யங்கார் எழுதியது.

[முதல் பதிப்பு 1,000.]

ஆரணி
திருநாவுக்கரசு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

காபிரைட்.] [இதன் விலை அணு 5.

முகவுரை.

இச்சிறு புத்தகத்தில் கூறியுள்ள காங்ரஸ் வர்த்தமானங்களனைத்தும் என் சொந்தச் சரக்கல்ல. காங்ரஸ் ரிபோர்ட்டுகளிலிருந்தும் ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் அம்மையார் இயற்றிய **"How India wrought for Freedom"** (சுதந்தரத்திற்காக இந்தியா எவ்விதமாய் உழைத்தது) என்கிற அற்புதமான நூலிலிருந்தும் விஷயங்களைத் திரட்டி, வெகு சங்ரகமாக யாவரும் காங்ரஸின் நடவடிக்கைகளைப் படித்தறியுமாறு, என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் முக்கியமான அம்சங்களை மாத்திரம் இதில் பாரத மாதாவின் கஷ்டங்களை அவளே எடுத்துரைக்கிற மாதிரி குறித்திருக்கிறேன்.

ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் அம்மையார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள காங்ரஸ் காவியத்தைப்போல் அருந்தமிழில் கல்விமான்கள் யாரேனும் எழுதி, இந்தியருக்குச் சுதந்தர தாகத்தை மேலும் மேலும் உண்டாக்கி, சுயராஜ்ய சித்தியால் பாரத மாதாவையும் பூவுலகத்தையும் ஈசன் திருவருளையும் திருப்தி செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை விஞ்ஞாபனஞ் செய்துகொள்வதற்காகவே எளியேன் இச்சிறு புத்தகத்தை வெளியிடத் துணிந்தேன்.

வந்தேமாதரம்.

ஆரணி,
9—6—22

வி. ந. அரங்கசாமி அய்யங்கார்.

தமிழ் மாகாண காங்ரஸ் கமிட்டி அக்ராசனர் ஸ்ரீமான்
ம. வி. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள்
எழுதிய

சிறப்புப்பாயிரம்.

ராஜீய ஞானத்தை எளிய நடையில் நமது ஜனங்களுக்குப் புகட்ட பல நூல்கள் தாய் பாஷையில் இக்காலம் தேவை. பல கனவான்கள் இப்பொழுது இவ்வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆங்கிலம் கசடறக் கற்றறிந்தவரும் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய காலமுதல் அரசாங்க சேவையைவிட சுதந்தரமான ஜீவனோபாயமே சிறந்ததென்று நினைத்து அதன் மூலமாய் தேச சேவையைக் கைக்கொண்டவரும், சுதந்தரித்த அபிப்பிராயத்துடன் வெளியிட்ட "மஹாத்மா காந்தியடிகளின் ஜீவிய சரித்திரமும் இந்தியாவும்" "சபேசன் அல்லது சுதந்தர ரக்ஷகன்" இவைகளின் கிரந்த கர்த்தாவும், அச்சுச்சட்டத்திற்கு இரையான "சுகோதயம்" பத்திரிகையின் ஆசிரியருமான ஸ்ரீமான் V. N, அரங்கசாமி அய்யங்காரை இந்தநூலின் மூலமாகத்தமிழ் உலகினருக்குச் சந்தோஷத்துடன் அறிமுகம் செய்துவைக்கிறேன். பாமர ஜனங்களுக்கு காங்ரஸைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்தபோதிலும், அதன் உற்பத்தி முதலிய விஷயங்களை ஆதியோடந்தமாய் சுலபநடையில் "சுருங்கக்கூறல் விளங்கவைத்தல்" உத்திக்கு அனுகுணமாகக்கூறும் ஒரு நூல் சொற்ப விலையில் அவசியம். இப்போக்

கொத்த தேவையை இந்த நூல் பூர்த்திசெய்கிறது. காங்ரஸைப்பற்றி விவரமாக அறியாத பாமர ஜனங்களுக்கு இந்நூல் அதை ஆதியோடந்தமாய் அவர்களுக்கு அறிவூட்டுவதுடன் காங்ரஸைப்பற்றி விரிவாக நம் தாய்ப் பாஷையில் எழுதப்பட்டிருக்கும் நம் கவிரத்னம் காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியாரிட இரண்டு புத்தகங்களையும் படிக்கும்படியான ஆவலையும் உண்டுபண்ணும். மற்றவர்களுக்கும் காங்ரஸைப்பற்றிப் பலவித தகவல்களை ஒருங்கு சேர்த்து உதவும் நூலாகவும் இது விளங்குகிறது.

தமிழ் உலகத்தினர் இதை ஆதரித்து, நூலாசிரியரை ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பகாலமுதல் அதன் சரித்திரத்தை சங்கிரஹித்து ஒரு நூலும் இதைப்போன்ற பல நூல்களையும் வெளியிடும்படியான உற்சாகத்தை ஊட்டுவார்களென்று நம்புகிறேன்.

ஆரணி.
11—6—22.

ம. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

பாரத நாடு.

ராகம்—ஹிந்துஸ்தானி தோடி.

பல்லவி.

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்.

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே,
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே யுப காரத்திலே,
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே,
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

4. ஆக்கத்திலே தொழி லூக்கத்திலே—புய
வீக்கத்திலே யுயர் நோக்கத்திலே,
காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

5. வண்மையிலே யுளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே,
உண்மையிலே தவமுத புலவர்
உணர்வினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

6. யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம்
அருளினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

7. ஆற்றினிலே சுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

8. தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி.

இந்தியாவின் சுதந்தரப்போர்.

அத்தியாயம் 1.

என்வரலாறு.

என் கதை மிகவும் நீளமானது. சொல்லப்புகுந்தால், பூலோக சரித்திரத்தில் என் கதையைத் தவிர வேறெந்தக் கதையும் இவ்வளவு நீளமாயிராது. ஏனெனில் பூவுலகில் என்சகோதரிகள் தோன்றுவதற்கு முன்னமே என்னைப் பிரமன் பூரண நாகரீகத்துடன் படைத்தான். தகத்தகாயமாய் எரிந்துகொண்டிருந்த பூகோளத்தில் முதல் முதல் என்னிடத்தில் (அதாவது இந்தியாவில்)தான் ஜீவராசிகள் தோன்றின. அக்காலமுதல் இக்காலவரைக்கும் என்வரலாற்றைக்கூறுவது சாமான்யமானவிஷயமல்ல. பத்து குறுக்கெழுத்துநிபுணர்கள் இடைவிடாமல் அல்லும்பகலும் நான் சொல்லுவதை எழுதிக்கொண்டுவந்தால் ஒருக்கால் மூன்று வருஷத்தில் ஒருவாறாக என் கதை முடியும். அல்லது "இம்மென்னு முன்னே இருநூறும் முன்னூறும் ஆச்சென்றால் ஐநூறும் ஆகாதா!" என்று மதுரகவிசொன்னதற்கு காளமேகப் புலவர் பதிலளித்ததுபோல் இம்மென்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும், ஆச்சென்றால் ஆயிரம் பாடலும் பாடக்கூடிய திறமையுள்ள ஆசுகவிகள் இதேவேலையாய் கவிமாரி பொழிவதாயிருந்தால், என் வரலாறு ஆறுமாதகாலத்தில் பூர்த்தியாகலாம்.

நீளத்தால் மாத்திரம் என் கதை மதிப்படைவதாக எண்ணிவிடக்கூடாது. நீளம் மதிப்புக் குறிகுறியானால் பூலோகத்தில் நீண்ட ஆறுகளும், மலைகளும், மரங்களும் மதிப்புறும். என் கதை நீளம் என்று சொல்வதின் அர்த்தம் என்னவெனில் என் ஐரோப்பிய சகோதரிகள் சமீபகாலத்தில் தோன்றி நீரின் குமிழிபோல் அற்ப வாழ்வோடு அழிந்தவாறு, என் வாழ்வு அழியாமல் யுகம் யுகமாய் நான் வாழ்ந்து புதிய இரகசியங்களை எடுத்தோதி ஜீவித்து வருகிறேன். உதாரணமாக சரித்திரத்தில் பிரக்யாதிபெற்ற அஸிரியா, சிரியா, கார்தேஜ், கிரீஸ், ரோமாபுரி, பாபிலோன்,

எகிப்து போன்ற எனது சிறியசகோதரிகளின் நாகரீகங்கள் தோன்றி, ஏகசக்ராதிபத்தியஞ் செலுத்தி, அழிந்து, மண்ணோடு மண்ணாய்ச்சேர்ந்து, பிணக்கோலமடைந்தன. ஆனால் நான் அந்த கதியைஇன்னும் அடையவில்லை.என் 32-கோடி புதல்வர்கள் அசிரத்தையாயிருந்து வந்தால் நானும் என் சகோதரிகள் கோஷ்டியைச் சேரவேண்டிவரும். அனாதியான கௌரவம் தாழ்வடைந்ததும், என் சுதந்தரவாழ்வு பராதீன வாழ்வானதும், என் சுயேச்சாதிகாரம் சர்வ அடிமைத்தனமானதும், என் சுய நிர்ணயம் குற்றேவலைச் செய்வதில் ஊக்கமாய் மாறி விட்டதென்பதற்கு யாதொரு தடையுமில்லை. என் ஒப்பற்ற இராஜநீதி, தண்டநீதி, சுக்ரநீதி, மனுநீதி, அர்த்தசாஸ்திரம், 64கலைஞானங்கள் ஏனைய ஸ்தூல வாழ்க்கையின் சிறப்புக்குக்காரணமான சாஸ்திரங்களும் உபாயங்களும் மறைந்தன. இதற்கெல்லாம் என்புதல்வர்கள் என்னை மறந்துவிட்டதே காரணம். ஆயினும் யானைவிழுந்தால் குதிரைமட்டமாவது நிலைக்குமென்கிறமாதிரி, என்ஜீவாதாரப்பொருள்களாகிய சதுர்வேதங்களும், தேவர்குறளும், மூவர்தமிழும், முனிமொழியும், கோவை திருவாசகமும், திருமூலர்சொல்லும் என்னைவிட்டகலாவரைக்கும் நான் தாழ்வடையமாட்டேன். என் ஆத்மசோதியை கத்தியால் அழிக்கமுடியாது, நெருப்பால் எரிக்கமுடியாது, தண்ணீரால் மறைத்துவிடமுடியாது, என்பதை அடிக்கடி மெய்ப்பித்து வருகிறேன். நான் என்றும் சிரஞ்ஜீவி. ஆகையால் என் கதைநீளம். நீளத்தை ஓர் அளவாகவைத்துக்கொண்டு பார்த்த போதிலும், என்னைப்போன்ற நீண்டசரித்திரத்தையுடையவர்கள் எப்புவியிலும் கிடையாது.

என்கதைக்கு நீளம்மாத்திரமேயன்றி அகலமும், ஆழமும் உயரமும் உண்டு. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குக் கணிதம் கற்பிக்கிறமாதிரி யான் கூறுவதாக எண்ணிவிட வேண்டாம். உண்மையை உதாரணத்துடன் எடுத்துரைக்கிறேன். என்கதைக்கு அகலமுண்டென்றேன். அதாவது என்கீர்த்தி குணகுடகோளார்த்தங்கள் முழுவதும் கிழக்கே ஜப்பானிலிருந்து மேற்கே அமெரிக்காவின் மேற்குமுனைவரைக்கும், தென்துருவத்திலிருந்து வடதுருவம்வரைக்கும் பரவியிருக்கிறது. என்வரலாற்றை மேற்கூறிய நான்குதிக்குகளுக்குள் அடங்கியஜனங்கள் பலவாறு சொன்னபோதிலும் என்னையறியாதாரில்லை. என்னை இகழ்வோரும், புகழ்வோரும், ஆள்வோரும், ஆதரிப்போரும், விசேஷ

மாயிருக்கிறார்கள். ஏனென்றால் நான் கற்காதசாஸ்திரமும் ஓதாத ஸ்தோத்திரமும், அணியாத ஆடையும் ஏவாதபடையும், செய்யாத தானமும் ஓம்பாத தவமும் இன்றைக்கு பூவுலகில் காணப்படவில்லை. புரொபெசர் மாக்ஸ் முல்லர் துணிந்துரைத்தவாறு, நான் சூக்ஷமமாய் நிஷ்டையிலிருந்து கிரகித்து சகலஜனங்களும் பயனடையும்வண்ணம் எடுத்தோதிய பூத பௌதிகவர்த்தமான காலங்களின் தத்துவங்களை தற்போது என் ஐரோப்பிய சகோதரிகளின்புதல்வர்கள் ஸ்தூலத்தில் நேருக்கு நேராய் விளக்கிக்காட்டுகிறார்கள். இதுதான் எனக்கும் அவர்களுக்கும் வித்தியாசமே தவிர வேறொன்றுமில்லை. என்செல்வக்குழந்தைகள் என்னைச் சரியாய் உணர்ந்துகொண்டால் அப்பொழுதுதான் எனக்கு ஆதிகாலத்தில் ஏற்பட்டிருந்தசிறப்பு மீண்டும் எனக்குவாய்க்கும். சமீபகாலமுதல் என்குழந்தைகள் கொஞ்சங்கொஞ்சமாய் என் அனாதியான நாகரீகத்தை நிலைநாட்டி, எனக்குத்தெரியாத சாஸ்திரங்களில்லை என்பதை ஸ்திரப்படுத்துகிறார்கள். ஆகையால் விசாலமான கல்விச் சமுத்திரத்தையும்நான் கடந்திருப்பதால், என் கதைக்கு அகலமும் உண்டு.

என் கதைக்கு நீளம் அகலத்தோடு, ஆழமும் இருக்கிறதென்றேன். அதாவது சகல சாஸ்திரங்களையும், தத்துவங்களையும், போகங்களையும், அனுபவித்து, பிறப்பு இறப்பு, புண்ணியபாவம், மோக்ஷம், நரகம் என்னும் சமுத்திரங்களின் உள்ளே நீந்திக்கொண்டு சென்று, சகல உலகங்களுக்கும், வெற்றிகளுக்கும், காரணபூதமாகிய அழிவில்லா தத்துவங்களைச் சேகரித்திருக்கிறேன். என் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், உபநிஷத்துக்கள், சங்கநூல்கள் இவைகளெல்லாம் மேற்கூறிய சமுத்திரத்தில் மூழ்கி எடுத்த விலையில்லா மாணிக்கங்கள். மதவிசாரணையிலும், ஆத்மானுபவத்திலும், தியாகத்திலும் எனக்குச் சமமாக யாரையும் சொல்ல முடியாதாகையால் என் கதை ஆழ முடைத்தாயிருக்கிறது. என் சகோதரிகள் மேற்புல்லை மேய்ந்து மேற்பார்வையோடு இகத்திறகு வேண்டியதில் கருத்தைச் செலுத்துகிறார்களேயொழிய, பரத்திற்கு வேண்டிய ஆழ்ந்த நோக்கங்களில் தலையிடுகிறதில்லை.

உயரமும் உண்டென்றேன். குணமென்னும் குன்றேறி நிற்பதே உயரமுடைமை. ஆகாய விமானருடாராய் இமய

மலைபோன்ற உன்னத மலைகளின் உச்சிக்குமேலே பறப்பது உயர்முடைத்தலாகாது. குணமாவது ஐம்புலனை வென்று ஆத்மஞானத்தையுணர்ந்து எங்கும் ஸ்ரீமந்நாராயணன் திவ்வியசொரூபத்தைக்கண்டு அபேதபுத்தியுடன் தொண்டுபுரிவதே உத்தமமான குணம். என்புதல்வர்களில் குணத்தால் உயர்ந்தவர்கள் அக்காலத்தும், இக்காலத்தும் இருந்துவருகிறார்கள். அரிச்சந்திரன் வீரபாகுவிற்கு அடிமையானதும், நளன் இருதுபன்ன மகாராஜனுக்கு மடைத்தொழில்புரியும் சமையற்காரனானதும், ஸ்ரீராமபிரான் பிராட்டியுடனும் இளையபெருமாளுடனும் வனவாசஞ்செய்ததும் பாண்டவர்கள் காடாண்டதும், மனுச்சோழன் தன்னுயிரையும் இளவரசன் உயிரையும் தியாகஞ்செய்ததும், தற்காலத்தில் கோபாலகிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தி, திலகர், லாலாலஜபதிராய், தாஸ், மஜ்ருல்ஹக், ஜாயகர், போஸ், ராய், ராஜகோபாலாச்சாரி, சுப்பிரமணிய சாஸ்திரி, கொண்டா வெங்கடப்பையா, போன்ற குணக்குன்றுகள் ஏராளமாயிருக்கிறார்கள். மகரிஷிகளும், சன்யாசிகளும், ரிஷீஸ்வரர்களும், நாயன்மார்களும், பகவத்பக்தர்களும், எனக்குமதிப்பைக் கொடுக்கிறார்கள்.

என்சகோதரிகள் ஆகாயத்தையளந்து விட்டதாகவும், வடதுருவத்தின் எல்லையைக் கண்டுபிடித்ததாகவும், 25 மைல்தூரம் பாய்ந்து அதற்கப்பாலுள்ள யுத்தவீரர்களைக் கொல்லக்கூடிய பீரங்கிகளைத் தயாரித்ததாகவும், செயற்கை மாணிக்கங்களையும் கற்களையும் உற்பத்திசெய்ததாகவும், அமெரிக்காவிலிருந்துசெய்யும் பிரசங்கத்தை உலகமுழுதும் ஏககாலத்தில் கேட்கும்படியான இயந்திரங்களையும், மணிக்கு 80 மைலுக்கு மேற்பட்ட வேகத்தையுடைய புகைவண்டிகளையும், மோடார்வண்டிகளையும், ஸ்ருஷ்டித்திருப்பதாகவும் எனக்கு இம்மாதிரியான வழிகளில்பயிற்சியில்லை என்றும் தற்புகழ்ச்சி கொள்கிறார்கள். பூலோகத்தில்குறித்த சில காலங்களில் இத்தகைய அற்புதமானசெய்கைகள் நடந்துவருவதை நாம் சகஜமாய்ப்பார்க்கிறோம். அலெக்ஜாண்டரும், ஷார்லமேனும், பிரடெரிக்கும், சந்திரகுப்தனும் அவரவர்கள்காலத்தில் வெகு ஆச்சரியமான காரியங்களைச் செய்து முடித்தனர். ஆனல் அவர்கள் நிலேத்தார்களா? அவர்கள் இராஜ்ஜியங்கள் நிலைபெற்றிருக்கின்றனவா? இல்லையே! “நீ என் அம்மாதிரிசெய்யக் கூடாது?” என்று என்னைக்கேட்கிறார்கள். என் பதில் என்னவென்றால் “பூலோக முழுவதையும் மயக்கும்படியான அதி

அற்புதமான செய்கைகளைச் செய்து, ஆத்மாவை மறந்துவிட்டால் என்னலாபம்?'' என்னும் கேள்வியே. நிலையில்லாதவைகளைப் புகழ்ந்து, அற்பவாழ்வில் ஆனந்தங்கொள்வது பேதைமை. அம்மா திரி அற்புதமான கருமங்களும் என் கதையிலிருக்கின்றன. அஸ்த்ரசஸ்த்ரங்களிலும், யாகயக்ஞங்களிலும், வீரச்செயல்களிலும் என்னது மைந்தர்கள் பராக்கிரமமடைந்திருந்ததுண்டு. ஆயினும் அது விசேஷமானதல்ல, குணமே பிரதானம். ஆத்மாவே அழியாச் செல்வம். ஆத்மானுபவம் பெறுவதே மாந்தரின் மார்க்கம். ஆகையால் தான் குணத்தைப் பெறவேண்டுமென்றும் ஆத்மாவைக் கண்டறிந்து, ஆத்ம சக்தியை வளர்த்து, ஜீவகாருண்யத்தால் பூலோகத்தில் சமாதானத்தை எற்படுத்தி, ஈஸ்வரசைதன்யத்தால் மோக்ஷசாக்ஷாத்காரத்தையடைய, உலகத்தை துறந்து, உடலைமறந்து, உயிரையும் அர்ப்பணஞ் செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

ஆத்ம ஜயம்.

1. கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
 கவர்ந்திட மாட்டாவோ? அட
 மண்ணில் தெரியுது வானம்; அது நம்
 வசப்பட லாகா தோ?
 எண்ணி யெண்ணிப் பலநாளு முயன்றிங்
 கிறுதியிற் சோர்வோ மோ?—அட
 விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலு
 மேவு பரா சக்தி யே.

2. என்ன வரங்கள், பெருமைகள், வெற்றிகள்,
 எத்தனை மேன்மைகளோ!
 தன்னை வென்றாலவை யாவும் பெறுவது
 சத்திய மாகுமென்றே
 முன்னை முனிவர் உரைத்த மறைப்பொருள்
 முற்று முணர்ந்த பின்னும்
 தன்னை வென்றாளும் திறமை பெறா திங்கு
 தாழ் வுற்று நிற்போ மோ?

என்று எனது பாரதியாரும் பாடவில்லையா?

அத்தியாயம் 2.

சுதந்தர தாகம்.

இடமும் தருணமும் வாய்க்கும்போது, என் பூர்வீகபெருமையின் காரணங்களையும், என் தற்காலநிலைமையின் அவஸ்தைகளையும் விவரமாக எடுத்துரைக்கிறேன். நான் எடுத்துக்கொண்ட விஷயம் "என்னை விடுதலைசெய்வதற்காக என்குழந்தைகள் செய்தபோர்." ஆகையால் அதைப்பற்றியே நான் எடுத்துரைக்க வேண்டியிருக்கிறது.

இந்து அரசாக்ஷி க்ஷீணதசையடைந்ததும், என் கௌரவம் குறையத்தொடங்கி சுயேச்சாதிகாரம் மங்கிற்று. சுதந்தரம் போய்விட்டபிறகு, என் குழந்தைகள் ஒற்றுமையின்றி, பேதபுத்தியுடன் ஜாதிச்சண்டை, மதச்சண்டை, இழந்த இராஜ்ஜியத்திற்காகச்சண்டை, கல்விச்சண்டை போன்றவைகளில் மனதைச் செலுத்தத் தலைப்பட்டனர். அதன்மூலமாக கோபம், மமதை, பொய், பித்தலாட்டம், மித்ரபேதம், ஹிம்சை, அஸத்தியம், கொலை, களவுபோன்ற துர்க்குணங்கள் ஜனித்து, ஜனங்களின் பழைய ஒற்றுமையையும் சிநேகத்தையும் விரட்டியடித்து, என் நாட்டின் ஐக்கியபாவத்திற்கும் பலத்திற்கும் தபோநிலைக்கும் தீங்கு நேரிட்டது. என் குழந்தைகள் என் ஆணையையும் உபதேசத்தையும் மறந்து, மூலபலசேனையைப்போல் ஒருவர்க் கொருவர் சண்டையிட்டு அந்நியநாட்டரசர்களை மத்தியஸ்தஞ்செய்வதற்காகவும் உபபலத்திற்காகவும் அழைத்ததனால், நான் சாஸ்வதமாய் பராதீனப்பட்டேன். அந்நியர் ஆக்ஷி ஒன்றன்பின் ஒன்றாய் என்சீரைக் கெடுத்துக்கொண்டே வந்தது. ஆயினும் எங்கும்நிறைந்த பரஞ்சோதி எனக்குத்திருவாய்மலர்ந்தருளிய சதுர்வேதங்களின் உதவியாலும், தேவர்களும் ரிஷீஸ்வரர்களும் எனக்கு உபதேசித்த மதஞானத்தாலும், ஆழ்வாராதிகளாலும், ஆசாரியர்களாலும் சித்தாந்தஞ்செய்தசமூகவாழ்க்கையின் ஆசார சீர்திருத்தங்களாலும், என் ஆத்மாநசியாமல் ஆசாபாசங்களெனும் சண்டமாருதச் சுழலின் இடையே மின்மினிப்பூச்சிபோல் என்பேருயிர் பிரகாசித்துக் கொண்டுவந்தது.

முகம்மதியர் அரசாக்ஷியில் கைத்தொழிலும், வர்த்தகமும்

வளர்பிறை சந்திரன் போல் விர்த்தியடைந்து, அந்நிய நாட்டு செல்வமெல்லாம் குவிக்கப்பெறும் பொக்கிஷமாயும் களஞ்சியமாயும் நான் விளங்கினேன். செல்வமும் செல்வாக்கும், இராஜநீதியும், இராணுவ அமுலும் கிடைக்கப்பெறினும், பல வகைப்பட்ட ஜனங்கள் எல்லாரும் ஏகமனதுடன் தேசபக்தி என்னும் கோயிலில் தத்தம் சுயநலத்தாலும் சிற்றகத்தாலும் ஏற்பட்டிருந்த சண்டை சச்சரவுகளை மறந்து, ஐக்கிய பாவத்துடனும் சமரச ஞானத்தோடும் என்னைப்பூஜித்துப்போற்றவில்லை. ஆகையால் மொகலாய இராஜ்யத்தின் கட்டிடமும் அஸ்திவாரக்குறைவினால் அசைக்கப்பெற்று, காலாந்தரத்தில் இறந்துபட்டது. அத்துடன் என் பூரண ஒளி மங்கிற்று.

என் இந்து—முகம்மதிய இராஜ்யம் அழிந்ததற்கு என்குழந்தைகள் நெல்லிக்கனி மூட்டையைப்போல் நடந்துகொண்டதே காரணம்.

அத்துடன் என் ஜனநாயக ஆக்ஷியும், ஸ்வராஜ்யமும் என்னை விட்டு விலகிவிட்டன என்றே நான் சொல்லவேண்டி யிருக்கிறது. இச்சமயத்தில் ஐரோப்பிய வியாபாரிகள் கொஞ்சங் கொஞ்சமாய், வியாபாரிகளாகவிருந்து மத்தியஸ்தஞ் செய்பவர்களாகவும், மத்தியஸ்தஞ் செய்வதிலிருந்து, கக்ஷிச்சண்டையில் போர்த்துணைவர்களாகவும், கடைசியில் ஆக்ஷிபெற்று, என்னை அரசாளத்தொடங்கினார்கள். என்சுதேச அரசர்கள் அவர்களுக்குக் கப்பங் கட்டி, அவர்கள் ஆதீனத்தில், அவர்கள் சட்ட திட்டங்களுக் கனுகுணமாக அரசாளும்படி நேர்ந்தது. ஆங்கிலேயர்கள் இராஜ்யம் நிலைத்ததும் கக்ஷிச்சண்டைகளும் மதச்சண்டைகளும் ஒருவாறாக மறைந்தன. ஆங்கிலேய அரசாக்ஷியில் ஒற்றுமைத்து ஜீவனோபாயம்செய்ய என் குழந்தைகள் அவர்கள் பாஷையைக்கற்று, அவர்கள் நடை உடை பாவனைகளை மேற்கொண்டு அவர்களிடத்தில் பயபக்தி வினயத்துடன் சேவகஞ்செய்து, பட்டம்பெற்று, சாண்வயிற்றிற்கும் நான்கு முழத் துண்டிற்கும் சொல்லொணு முயற்சிகள் செய்தனர்.

இங்கிலீஷ் ஈஸ்டு இந்தியா கம்பெனியின் ஆக்ஷியும் அதன் பிறகு பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்குட்பட்ட ஆக்ஷியும் என் ஆத்ம விர்த்திக்கும், ஸ்தூலவாழ்க்கையின் இன்பங்களை அபிவிர்த்தி செய்வதற்கும், என் இழந்த சுதந்தரத்தை மீண்டும் அடைவதற்கும் வேண்டிய சௌகரியங்களை யுண்டுபண்ணவில்லை. எனக்கும் என்

32 கோடி ஜனங்களுக்கும் நாகரீகம் போதாதென்றும், ஆங்கில நாகரீகமே பூவுலகில் உத்தமமான நாகரீகமென்றும், அதை என் பிரஜைகளுக்குப் போதித்து அதன் மூலமாய் என்னைக் கரை யேற்றுவது அவர்கள் செய்யக்கூடிய ஓர் பேருபகாரமென்றும், அவ்வண்ணஞ் செய்யுமாறு சர்வேஸ்வரன் தன்முக்கடமைகளையும் ஆங்கிலேயர்களுக்கு மாற்றிக்கொடுத்ததாகவும், தங்கள் கையில் கடவுளால் ஒப்புவிக்கப்பெற்ற தேசத்தை முன்னேற்றமடையச்செய்யத் தாங்கள் திரிகரண சுத்தியுடனும் தியாகபுத்தியுடனும் அரசாண்டுவருவதாயும், ஆங்கிலேயதுரைத்தனத்தார் இடைவிடாமல் கவர்ன்மெண்டு ரிகார்டுகளிலும், சக்கிரவர்த்திகள் பிரகடனங்களிலும், பிரசங்கங்களிலும் வெகுதாராளமாக வெளியிட்டு வந்தனர். உண்மையில் அவர்களுக்குத் தெரிந்ததையவர்கள் எடுத்துரைத்தனர். அவர்கள் எண்ணியதை அவர்கள் நம்பினார்கள். குறுத்தோலை பழுத்தோலையைப்பார்த்து நகைத்தல் இயற்கைதானே! என் அனாதி நாகரீகத்தின் பெருமையை யவர்கள் படித்தார்களா? என்னுடன் வர்த்தகஞ்செய்து பணத்தைத் திரட்டி, அதைக்கொண்டு ஒய்யாரமாக ஜீவித்தும், ஆடம்பரமாக அரசாளுவதையவர்கள் சற்றுவது கவனித்தார்களா? இல்லை. என் பாஷைகள், மதங்கள், கலைகள் இவைகளெல்லாம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் நாகரீகத்தையும் நடையுடைபாவனைகளையும் என் பிரஜைகளுக்குப் புகட்டி, என்னையும் அவர்கள் வழி திருப்பிவந்தார்கள். ஆகையால் என்னைச்சேர்ந்தவைகளெல்லாம் சீர்கெடவும், அவர்களைச் சேர்ந்த தெல்லாம் சீர்பெறவும் ஆரம்பித்தன.

அஃதெவ்வாறாயினும், பொதுவாய்க்கூறுமிடத்து என் நாகரீகமும் சுயஆக்ஷியும் அழிவுற்றதால் கீழ்க்கண்ட கஷ்டங்கள் சம்பவித்தன.

(1) என் ஜனங்களுக்கு தேசபக்தியும், ஜனாபிமானமும், மதாபிமானமும், ஐக்கியபாவமும், பாஷாபிமானமும் ஈஸ்வரபக்தியும் அடியோடு அற்றுப்போய்விட்டன.

(2) என் கைத்தொழில்களும், வர்த்தகமும், பயிர்ப்பச்சைகளும் க்ஷீணித்து, என் ஜனங்களில் கூலிக்கு வேலை செய்பவர்களும், ஏஜெண்டு வேலை பார்ப்பவர்களும் உத்தியோக சேவகஞ் செய்பவர்களும் அதிகரித்தார்கள். இதனால் சுயமதிப்பும், சுய நம்பிக்கையும், சுஜாதி அபிமானமும் மாறி, அடிமைத்தனமும்,

அந்நியரிடத்தில் நம்பிக்கையும் சுஜாதித் துவேஷமும் அதிக ரித்தது.

(3) பொதுவாக நான் நாடிழந்தேன். பராதீனப்பட்டேன். சீர்குலைந்தேன். பலமிழந்தேன். ஏகச்சக்ராதிபத்யஞ்செலுத்தி, பூலோகத்தை என் ஆத்மஞானப்பிரவாகத்தால் புனிதப்படுத்திய எனக்கு சர்வ அடிமைத்தனம்கிடைக்க நேரிட்டது.

இம்மாதிரி கஷ்ட நிலைமையில் வெகுகாலங் கழித்தேன். இங்கிலாந்திலிருந்து ஐ. வி. எஸ். பரீக்ஷை கொடுத்துப் பெரிய உத்தியோகஸ்தர்களாகவும், கலெக்டர்களாகவும் வரும் ஆங்கில வாலிபர்களுக்கு என் தலை நறைத்த முதியோர் தலைவணங்கி, சலாம் செய்து, அவர்கள் மனப்போக்கின் பிரகாரம் தாங்களும் சம யோசித வேடம்தரிக்க நேர்ந்திருப்பதையும், எவ்வித உயர்ந்த கல்வியைக்கற்றபோதிலும், தங்கள் நாட்டில் உயர்ந்த பதவிகளை வகிக்கவும், ஆங்கிலேயருக்குச் சரியான சமபதவியைக் கோரவும், பிறப்புரிமைகளை யாதொரு முட்டுப்பாடின்றி யடையவும், தேசத் திற்குவேண்டிய சட்ட திட்டங்களைச் செய்வதில் கலந்துகொள்ள அக்கு ஏற்படுத்திக் கொள்ளவும், தேச வருமான செலவு திட்டங் களில் தங்கள் கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்துச் சொல்லித் தக்க பரி காரங்களைத் தேடவும், என் பிரஜைகளுக்கு வழி ஏற்படாமையால் என் 32 கோடி ஜனங்களின் தலைவர்கள் கொஞ்சங் கொஞ்சமாய், என் கஷ்ட நிலைமையைப்போக்குவதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடவாரம்பித்தனர். அதுமுதல் சமாசாரப் பத்திரிகைகளும், கூட்டங்களும், அரசியல் சம்மந்தமான புத்தகங்களும் வெளிக் கிளம்பின. ஆங்கில அரசியல் தத்துவங்களையும், சுதந்தரக் கிளர்ச்சிகளின்போக்கையும், மந்திரிகளின் பிரசங்கங்களையும் மனனஞ் செய்து, தாங்களும் என் அம்மாதிரியான கௌரவத்தையும் சிறப் பையும் அடையக்கூடாது? என்றகேள்வியை என் பிரஜைகள் கேட்கத்தொடங்கினர்.

சுதந்தரதாகம் கிளம்பிவிட்டது. பூர்வீக இந்தியவாசனை மீண்டும் வீசியது. வேதத்தொனிகளும், பிறப்புரிமைகளை மீட் கக்கூடிய அபிலாஷைகளும் இடைவிடாமல் என்தலைவர்களின் மனதைச் சஞ்சலிக்கச்செய்தன. என்மதமும், பாஷைகளும், நாகரீகமும், சரித்திரமும் மீண்டும் போஷிக்கப்பெற்று, என் அடிமைத்தொழிலைப் போக்குவதற்கான ஏற்பாடுகளைப்பற்றி

அவர்கள் அல்லும் பகலும் யோசித்துவந்தார்கள். இச்சுதந்தரப் போராட்டத்தின் வரலாற்றை அடுத்த அத்தியாயங்களில் காணலாம்.

அத்தியாயம் 3.

காங்ரஸ் மகாசபை.

இது 1922ஆு மேமீ. இன்றைக்கு 38 வருடங்களுக்கு முன் 1884ஆு டிசெம்பர் மாதம் சென்னையில் திவான் பகதூர் ரகுநாத ராவ் அவர்கள் வீட்டில் காங்ரஸ் மகாசபையின் அஸ்திபாரம் ஏற்பட்டது. இன்றைக்குக் காங்ரஸ் என்னும் பெயரைக்கேட்காதாரில்லை. கோடிக்கணக்கான ஜனங்கள் காங்ரஸ் அங்கத்தினராயிருந்து வருகிறார்கள். அது ஜனநாயக ஆக்ஷியின் பிரத்யக்ஷஸ்வரூபமுடையது. ஈசன் கோயிலில் ஜாதிபேதம், நிறபேதம், மதபேதம், முதலியன மறைந்து பக்திமயமாய் விளங்குவதுபோல், இன்றைக்குக்காங்ரஸில் ஐக்கியபாவம் உதித்து, சமரசநோக்கம் மேலிட்டு, "நாம் இந்தியர்கள். நாம் நம் அன்னையாகிய பாரதமாதாவிற்குச் சேவகஞ் செய்கிறோம். சுயநலத்தைப்பாராட்டோம். எது வந்திடினும் வருக. காங்ரஸ் கொள்கைகளைத் தீரமுடன் பின்பற்றுவோம்" என்று காங்ரஸ்வீரர்கள் கர்ஜிக்கிறார்கள். இப்பெரிய மகாசபைக்கு 17 தலைவர்கள் காரணபூதராயிருந்து, அடுத்த வருஷம் 1884 பூனாவில் முதல் காங்ரஸ் கூடும்படித் தீர்மானித்தார்கள். ஆனால் அவ்வருஷம் புனாவில் காலாரா சூறையாடிக்கொண்டிருந்ததால், முதல் காங்ரஸ் பம்பாயில் W. C. பானர்ஜியின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. 72 பிரதி நிதிகள் ஆஜராயினர். அக்கிராசனர் காங்ரஸின் நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு விவரித்தார்.

"(1) இந்திய இராஜ்யத்தின் நானு பாகங்களி லும் தேசாபிவிர்த்திக்காகப் பேரும்பான்மையும் உழைப்பவர்கள் நெருங்கிப்பழகவும் ஸ்நேகிக்கவும்,

(2) என்றும் ஞாபகத்திலிருக்கக்கூடிய லார்டு ரிப்பன் துரையவர்கள் ஆக்ஷிகாலத்தில் பிறந்த தேசீய ஐக்கியபாவத்தைப் பூரணமாய் மலரச்செய்யவும், அதற்கனுகுணமான மனோபாவங்களை ஊர்ஜிதப்படுத்தவும், நேராய் கூட்டுறவால் நிற, மத, மாகாண பேதங்களையும் தப்பெண்ணங்களையும் போக்கவும்,

(3) சமுகவாழ்க்கையின் வேத அத்யாவஸ்யமான ஆசாரசீர்திருத்தங்களைப்பற்றி வேதஜாக்கிரதையாய் போதுமானவரையில் உதகரித்தபின் அனுபவத்தில் முதியோர்களானக் கல்விமான்களின் அபிப்பிராயங்களைத்திரட்டி ஒரு ரிகார்டு தயாரித்தல்,

(4) போது (அரசியல்) விவகாரங்களில் அடுத்த 12 மாதங்களில் என்னென்ன துறைகளில் என்னென்ன விதமாய் தேசீய ஊழியர்கள் உழைப்பது உசிதம் என்று நிர்ணயிப்பது. இவைகள் காங்ரஸின் நோக்கங்கள்."

முக்யமான முதல் காங்கிரஸ் தீர்மானங்கள்.

(1) சென்னை இந்துபத்திரிகையின் பிரபல ஆசிரியரும் வீரசிங்கமுமான ஸ்ரீமான் G. சுப்பிரமணிய அய்யர் "இந்திய அரசாக்ஷியின்போக்கை ஆராய்ச்சிசெய்ய ஓர்ராயல் கமிஷன்" வேண்டும் என்ற தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்.

(2) இந்திய விவகாரங்களைக் கவனிக்க இங்கிலாந்தில் இருந்து வரும் "இந்தியா கவுன்ஸிலை" அடியோடு எடுத்துவிட வேண்டும் "என்று ஸ்ரீமான் சிப்ளங்கார் பேசினார்.

(3) "சட்டசபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் இந்தியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும் அப்படி தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளுக்குத் தேசத்தின் வரவு செலவு திட்டங்களைக் கவனிக்க அக்கு கொடுக்கப்படவேண்டும்" என்று ஸ்ரீமான் K. T. திலாங்கு பிரஸ்தாபித்தார்.

(4) "ஐ. ஸி. எஸ். பரீக்ஷை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏககாலத்தில் நடைபெறவேண்டுமென்றும், அப்பரீக்ஷைக்கு ஆஜராகிறவர்களின் வயதை உயர்த்தவேண்டும்" என்று ஸ்ரீமான் தாதாபாய் நவரோஜி பேசினார்.

(5) ஸ்ரீமான் P. ரங்கய்யநாயுடு "இராணுவச் செலவை குறைக்கவேண்டு மென்று" ஓர் தீர்மானத்தை பிரஸ்தாபித்தார். இவைகளும் மற்றுஞ் சில தீர்மானங்களும் முறையே ஆதரிக்கப் பெற்று நிறைவேறின.

மேலே குறித்த ஐந்து தீர்மான்ங்களையும் கவனித்துப்பார்த்தால், முதல் காங்கரஸ் தலைவர்களின் விசாலநோக்கமும், நுண்ணறிவும், நிதானமும் தெற்றென விளங்கும். அப்படி இருந்தும் 37 வருடங்களுக்கு முன் என் புதல்வர்கள் விரும்பிய சீர்திருத்தங்களின் தத்துவங்கள் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

இரண்டாவது காங்கிரஸ்.

[1886-இடம், கல்கத்தா; அக்கிராசனர், தாதாபாய் நவரோஜி, பிரதிநிதிகள் எண்ணிக்கை 434—முக்கியமாய் கவனிக்கவேண்டிய

விஷயம்: காங்ரஸ் பிரதிநிதிகள் சென்றவருஷத்தில் தாங்களே சுதாவாகச் சென்றதுபோலல்லாமல், இவ்வருஷம் பொதுஜனங் களால் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.]

டாக்டர் ராஜேந்திரலாலா மித்ரா வரவேற்புக்கமிட்டி அக்ரா சனராயிருந்து, அவர் அரியபிரசங்கத்தில் "அந்நியகவர்ன்மெண்ட் எவ்வளவு உத்தமமானதாயினும், எவ்வளவு நல்லெண்ணமுடை யதாயினும், ஜனங்களின் வேண்டுகோள்களைத் தெரிந்துகொள்ள எவ்வளவு சிரத்தைகாட்டினபோதிலும், ஜாதி, மதம், நிறம், நாகரீ கம் இவைகளில் முற்றிலும் அதுவேற்றுமைப்பட்டதாயிருப்பதால் ஜனங்களின் மனப்போக்கையறிந்து அதன்படி நடப்பது இயற்கை யாகவே அசாத்தியம். ஆகையால் சட்டசபைகளில் ஜனப்பிரதி நிதிகள் அவசியம்" என்று வெகுதெளிவாக எடுத்துக்காட்டினார்.

என் மூத்தகுமாரர் தாதாபாய் நவரோஜி அக்கிராசனப் பிர சங்கத்தில் என்தேவைகளையும், என் பிரஜைகளின் தரித்திரத்தை யும் சந்தேகத்திற்கிடமில்லாமல் எடுத்துரைத்து, இந்தியாவின் கஷ்டங்களையும் அவைகளைப்போக்கும் வழிகளையும் குறிப்பிட காங்ரஸுக்கு அதிகாரம் உண்டென்றும், மதாசாரவிஷயங்களில் காங்ரஸ் நுழையக்கூடாதென்றும், இந்தியர்களனைவரும் ஒருங்கு சேர்ந்து ஒப்புக்கொள்ளக்கூடிய அரசியல் விவகாரங்களையே காங் ரஸ்கவனிக்கவேண்டுமென்றும், சமூகவாழ்க்கையின் சீர்திருத்தங் களை அது சம்பந்தமான கிளைக்கூட்டங்களும் காங்ரஸுகளுமே நிர்ணயிக்கவேண்டுமென்றும் சந்தேகத்திற்கிடமில்லாமலும் யாவ ரும் அங்கீகரிக்கக்கூடிய முறையிலும் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டார்.

வழக்கம்போல் D. E. வாச்சா என்மைந்தர்களின் தரித்திர நிலைமையையும், லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஒருவேளை ஆகாரம் அருந்துவதையும், அதுவும் இல்லாமல் பலகாலங்களில் அவர்கள் வாழ்நாட்களையோட்டுவதையும் மிக்க உருக்கமாய் தெரிவித்தார். சென்னை கனம் சுப்பிரமணிய அய்யர் அவரைத்தாங்கிப் பேசினார்.

ஜனப்பிரதிநிதித்வம், ஜூரிகளால் விசாரிக்கப்படுதல், சேனைக்கு இந்தியர்களைச்சேரும்படி உத்திரவளித்தல், சுயஆக்ஷி ஸ்தாபனங்கள்—இவைகளைப்பற்றிய தீர்மானங்கள் வெகு குதூ கலத்துடன் நிறைவேறின.

இரண்டு பிரசங்கங்களின் சாராம்சத்தை மாத்திரம் ஈண்டு குறிக்கிறேன்.

"இராணுவ இலாகாவில் இந்தியர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை ராஜாராம்பல் சிங்கு பிரேரணை செய்யும்பொழுது சொன்னதாவது.

"கவர்ன்மெண்டார் நமக்குச் செய்த நன்மைக்காக நாம் மிக்க நன்றி பாராட்டுகிறோம். ஆனால் அவர்கள் எவ்வளவு நல்லெண்ண முடையவர்களாயினும், அவர்களால் இராணுவ இலாகாவில் பயங்கரமானதும் சீர்ப்படுத்தக் கூடாததுமான தீங்கு நமக்கு ஏற்படும்பொழுது நாம் நன்றி பாராட்டமுடியாது. நம்முடைய ஸ்வபாவத்தைக் குறைத்து, வீர்யத்தை யொடுக்கி க்ஷத்ரிய குலத்தைச் சேர்ந்த சூரர்களை குயில் பேணு ஒட்டும் ஆட்டுமந்தைகளாகச் செய்யும்பொழுது நாம் நன்றியுள்ளவர்களாயிருத்தல் அசாத்தியமானது. தெய்வாதீனமாய் நாம் இன்னும் அந்த நிலைமைக்கு வரவில்லை.

நம்மவர்களில் பலர் இன்னும் பல இடங்களிலும் சமயம்நேர்ந்தால், நம்வீடுகளையும் நமக்கு விசேஷ நன்மை செய்திருக்கும் இக்கவர்ன்மெண்டையும் காப்பதற்காகப்போர்செய்து தங்கள் பிராணனையும் தியாகஞ்செய்யத் தயாராயிருக்கிறார்கள். நான் கடினமாய்ப் பேசக்கூடும். ஆயினும் நான் சொல்வது உண்மை. தங்களையும் தங்கள் தேசத்தைக் காக்கக்கூடிய ஆற்றலையும் அழித்துவிட்டால், வேறெந்த பரிகாரத்தையும் எந்த நாடும் தேடமுடியாது.

நம் கவர்ன்மெண்டார் தப்பெண்ணத்துடன் கையாளும் விசனிக்கத்தகுந்த இராணுவ ஆக்ஷிமுறையினால் நாம் மாத்திரந்தான் கஷ்டமுற்று வந்ததைப் படவேண்டும் என்றெண்ணவேண்டியதில்லை. நாற்புறமும் சுற்றிப்பாருங்கள். எங்கே பார்த்தாலும் ஏராளமான போர்த்தளவாடங்கள் காணப்படுகின்றன. சீக்கிரத்திலேயோ, காலஞ்சென்றோ, மகத்தான ஓர் பெரிய யுத்தம் நடக்கப்போகிறது. அதில் இங்கிலாந்தும் சம்பந்தப்படவேண்டிவரும். இங்கிலாந்து சமுத்திரத்தால் சூழப்பட்டிருப்பதனால், அதற்கு அவ்விடத்தில் ஏதோ கொஞ்சம் பாதுகாப்பு ஏற்படலாம். ஆனால் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் யாதொரு ஸ்நேகபாவத்தையுடைய கடலுமில்லை. தரைவழி இன்னதென்பது அனைவருக்கும்

தெரியும். இந்தியா தனிமையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. அபாரமானபோர் ஐரோப்பிய தேசத்தார் இங்கிலாந்தின்மேல் தொடர்வதாயின், அது இந்தியாவில்தான் நடக்கும். இங்கிலாந்தின் பாதி பெருமைக்கும் பணத்திற்கும் காரணமாகிய இந்தியாவில்தான் அப்பேர்ப்பட்ட யுத்தம் நடக்கும்.

அக்காலத்தில்தான் இந்தியர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்காமல் வைத்திருந்ததற்காக, இங்கிலாந்து வருத்தமுறும். லக்ஷக்கணக்கான இந்திய சேனைவீரர்களை யுத்த ஆயத்தமாய் வைத்திருந்து, பகைவர்களை இந்தியாவிலிருந்து விரட்டியடிப்பதைவிட்டு தன் அற்பசேனையைத்தான் நம்பவேண்டும். இந்தியர்கள் அப்பொழுது நல்வாழ்த்துக்களை மாத்திரம் கொடுக்கக்கூடுமேயொழிய வேறொன்றும் செய்யவியலாது. நல்வாழ்த்துக்கள் நல்லவைகளே. ஆயினும் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் எதிர்த்து இராஜ்ஜியத்தைக்காக்கும் மதில்கள் அவைகளாகா!

தற்போது கவர்ன்மெண்டார் அனுஷ்டித்துவரும் இராணுவ முறையை எங்கள் க்ஷேமத்தையுத்தேசித்தே நாங்கள் கண்டிக்கிறோம். பிரபுவாகட்டும் பக்கிரியாகட்டும், வீரச்செயல்களைச்செய்யவும், மனிதர்களைச்சூரர்களாக்கவும், மனிதர்களுக்கு அப்பெயரைப் பொருந்தச்செய்யவும், காரணமாயுள்ள தன்னம்பிக்கையை நாம் இழந்துவருகிறோம். நான் 5 வயது குழந்தையாயிருக்கும்பொழுதே என்பாட்டனார் யுத்தப்பயிற்சியை எனக்குக்கற்பித்தார். ஐம்பது வருஷத்திற்குமுன் ஒவ்வொரு வாலிபனும் சமயம் எற்படும் பொழுது யுத்தத்தில் தன்புஜபல பராக்கிரமத்தைக்காட்ட அவாக்கொண்டிருந்தான். ஆனால் அதைநினைக்க என் உள்ளத்தில் நானாவித மனோ எழுச்சிகள்தோன்றுகின்றன. மனிதர்கள் யுத்தவீரர்களாகவேண்டுமானால், கஷ்டகாலம் நேரிடும்சமயத்தில் எந்த வேலைக்கும் நாம் தயாராயிருக்கவேண்டுமானால் — ஒவ்வொரு தேசத்திற்கும் அம்மாதிரியான சம்பவம்நேரிடும். நமக்கு ஆரம்ப முதல் ஆயுதப்பயிற்சிவேண்டும். நம் தகப்பன் பாட்டன் ஏனையோர் சண்டைசெய்வதைப்பார்க்கவும், அவர்களோடு கலந்து கொள்ளவும்வேண்டும். 35 வருடங்களுக்குமுன் அயோத்தியில் கனவான் என்றழைக்கப்பட்ட ஒவ்வொருவனும் யுத்தப்பயிற்சியை தன் வேலையின் ஒருபாகமாகக் கருதினான்.

மற்றொரு அம்சமும் நாம் கவனிக்கவேண்டும். நிரந்தரமாய்

அமைக்கப்பெற்றிருக்கும் சேனையின் அபாரமான செல வினல் இந்தியா உண்மையில் தரித்திரதசையை யடைந் திருக்கிறது. சீக்கிரத்திலோ, நாட்கழித்தோ இப்பெரிய செலவு தேசத்தையோ அரசாங்கத்தையோ அழித்துவிடும். இப்பொழுது வாலண்டியர்களைச் சேர்த்து யுத்தப்பயிற்சி கொடுத்தால், தாங்க முடியாத இராணுவச்செலவைக் குறைப்பதுடன், தேச பாதுகாப் பில் தற்போதைய பலத்தைவிட அதிகமாகவும் செய்யக்கூடும்.

இம்மாதிரியே மணிக்கணக்காய் நான் பேசக்கூடும். ஆயுதச் சட்டத்தினல், ஜனங்களும், அவர்கள் ஆடு மாடுகளும், விளைச்சல் களும் துஷ்டமிருகங்களிடத்தில் ஒப்புவிக்கப்படுகிறார்கள். இந்தி யக் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் ஆயுதத்தை வைத்துக்கொள்ளும் உரிமையை வழங்கி, அவ்வுரிமையை இந்துக்களுக்கும் மகம்மதியர் களுக்கும் இல்லை என்பதால் ஏற்படும் பாரபக்ஷமான விதிகள் இங்கி லாந்து இந்தியாவிற்குச் செய்த வாக்குறுதிகளையும் பிரதிக்ஞைகளை யும் மீறி நடக்கின்றனவென்பதைப்பற்றியும், அம்மாதிரி நடப்ப தால் நமக்கு ஏற்படும் அவமானத்தைக்குறித்தும் அநீதியைக்குறித் தும் நான்பேசக்கூடும். எல்லாருக்கும் ஆயுதத்தைவைத்துக் கொள்ளும் சுதந்தரம் கொடுக்கப்படவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இராஜபக்தியிலும் படிப்பிலும் பிரசித்திபெற்ற படிப்பாளிகளுக்குத்தக்க நிபந்தனைகளுடனும் விதிகளுக்கடங்கியும் கொடுக்கப்படவேண்டுமென்றே நான் கூறுகிறேன்'' இம்மாதிரி யான வீரமொழிகளைப் பேசினர்.

ஸ்தல ஸ்தாபனங்களைப்பற்றிப் பேசுங்காலத்தில், பாபுசுரேந் திரநாத்பானர்ஜி கீழ்க்கண்டவாறுபேசினர்.

"சுயராஜ்யம் இயற்கையின் அமைப்பு. அது ஈஸ்வரசங்கல் பம். பிரதிதேசமும் தன்னுடைய விதிகளை தானே நியமித்துக் கொள்ளவேண்டியது—இம்மாதிரிதான் சர்வேஸ்வரனின் ஆஞ்ஞை அவன்கையாலேயே என்றும் அழியாப்புத்தகத்தில் (வேதத்தில்) எழுதியிருக்கிறது—நாம் சுயமாக அரசாக்ஷிசெய்கிறோமா? இதற் குப்பதில், இல்லையென்றுதான் சொல்லவேண்டும். நாம் இயற் கைக்கு விரோதமான ஸ்திதியில்வசிக்கிறோமா? ஆம்! வைத்தியன் கட்டளைப்படி ஜீவிக்கும் வியாதியஸ்தன் எந்த நிலைமையிலிருப்பா னே அதேநிலையில் நாமுமிருக்கிறோம். பூலோகத்தில் சுதந்தரத் தை விசேஷமாய் விரும்பும் தேசங்களில் ஒன்றின் ஆதீனத்தின்கீழ்

பரீக்ஷை நிலையிலிருந்துவருகிறோம். இதுவரைக்கும் பரீக்ஷைசெய்ததுபோதும், எங்கள்மூக்காங்கயிற்றை எடுத்துவிடலாம். குழந்தை பருவத்தைத்தாண்டி, நாங்கள் பூரணவயதையடைந்து விட்டதால் எங்களுக்குச் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் ஒரு பாகத்தையாவது நாங்களே நடத்திக்கொள்ளும்படி விடவேண்டும் என்று நாம் இப்பொழுது கேட்கிறோம். இப்படிச் செய்யாவிட்டால், இந்தியாவில் பிரிட்டிவ்ஷ் ஆக்ஷியின் குணுதிசயத்தை அது அழுத்தமாகக் கண்டிக்கும். ஏனெனில் பிரிட்டிவ்ஷ் அரசாக்ஷியும் படிப்பும் கிடைத்து ஒரு நூற்றாண்டு சென்ற பிறகும், நாங்கள் சுய ஆக்ஷியின் தத்துவங்களையும் முறைகளையும், கிரகித்துக்கொள்ளச் சக்தியற்றவர்கள் என்ற அர்த்தத்தைக்கொடுக்கும். இவ்விஷயத்தைப்பற்றி எனக்கு ஒரு பயமுமில்லை. எங்கள் மாகாணத்தில் ஸ்தல சுய ஆக்ஷி விசேஷ முன்னேற்றமடைந்திருக்கிற தென்பதை வங்காளக் கவர்னரே ஒப்புக்கொண்டிருக்கிறார். இம்மாதிரியே இதர மாகாணங்களிலும் யோக்கியதாபத்திரம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படியில்லாமல் வேறுவிதமாயிருந்தால் அது ஒரு ஆச்சரியமாயிருக்கும். நம் பஞ்சாயத்து ஏற்பாடு மலைகளைப்போன்ற புராதனமுடையது. அது ஜனங்களின் ஸ்வபாவங்களிலும் இருதயங்களிலும் வரையப்பட்டிருக்கிறது. ஆகையால் சுயராஜ்யம் இந்தியாவின் ஜனங்களின் ஆசாரங்களுக்காவது அல்லது எண்ணங்களுக்காவது புதிதானதல்ல.''

இதுசம்பந்தமாய் பண்டித மதன் மோகன் மாளவியாவின் அபிப்பிராயங்களையும் இங்கே கவனித்தல் உசிதம்.

''ஜனநாயக ஸ்தாபனங்களின் அவச்யத்தைப்பற்றியும், பிரயோசனத்தைப்பற்றியும், நாம் பிரிட்டிவ்ஷ் கவர்ன்மெண்டாருக்கு விளக்கிக்காட்டவேண்டியது அனுவசியம். குடிகள் தனக்குச்செய்ய வேண்டிய கடமைகளை மட்டில் கவனித்து, அவர்கள் உரிமைகளைக் கவனியாத ஓர் கொடுங்கோல் மன்னனுல் நாம் ஆளப்பட்டு வந்தால் நாம் அப்படிச் செய்யவேண்டியது அவசியமாயிருக்கும். ஆனால் பிரிட்டிஷார் சுதந்தரத்திற்காகச்சண்டை செய்து அதைக் கடைப் பிடிக்கவேண்டி தங்கள் பிராணனையும் இருதயத்தின் இரத்தம் ப்ரவாகமெடுக்கும்படி தியாகஞ்செய்த பிரிட்டிஷாருக்கு, அவர்கள் நடத்தையைப் பின்பற்றும் நாம் அவ்வண்ணம் செய்ய வேண்டியதில்லை.

பிரதிநிதித்வத்தோடுகூடிய ஸ்தாபனங்க ளில்லாவிட்டால் இங்கிலீஷ்காரன் எதற்குச்சமானம்? அவன் இங்கிலீஷ்காரனே யல்ல. அவன் ஒருபொம்மை. ஒரு மாயை. நான் அடிக்கடி சுற்றிப்பார்க்கும்பொழுது இங்கிலீஷ்காரர்கள் என்கிற பெயரைத் தரித்து, ஸ்தல ஸ்தாபனங்கள் கூடாதென்றும், யதேச்சாதிகாரத்தை விர்த்திசெய்யக்கூடியவைகளையே ஸ்தாபிக்கமுயலும் ஆங்கில பிரபுக்களைப்பார்த்து ஆச்சரியப்படுகிறேன். உண்மையான ஓர் பிரிட்டனுக்கு அவன் இலக்கிய இலக்கணங்கள் எவ்வாறு அவனில் ஓர்பாகமாயிருக்கின்றனவோ அவ்வாறே பிரதிநிதித்வம் பொருந்திய ஸ்தாபனங்களும் அவனில் ஓர் பாகமாயிருக்கின்றன. சுயேச்சாதிகாரத்துடன் பிறந்தகுடிகளில் முதன்மை ஸ்தானத்தைவகிக்கும் நமக்கு அதனுடைய ஆக்ஷியால் நம்மை அபேக்ஷிக்கும்படிச் செய்த உரிமையை நமக்கு கிரேட்பிரட்டன் கொடுக்காதென்றுயார் எனக்குச் சொல்வார்கள்?

பிரதிநிதித்வம் இல்லாவிட்டால் தீர்வைகிடையாது. இதுதான் ஆங்கிலேயரின் அரசியல் பைபிளில் முதல் ஆஞ்ஞை. தன் மனச்சாக்ஷியை உபாயத்தால்மறைத்து, நம்மை வாயில்லா ஆடுமாடுகளுக்குச்சமமாகப்பாவித்து நமக்கு அவன் எப்படி தீர்வைவிதிக்கக் கூடும்? ஆனால் நாம் ஊமையாயிருந்தகாலம் போய்விட்டது. இப்பெரிய காங்ரஸில் இந்தியாவிற்குப் பேசும்சக்தி கிடைத்திருக்கிறதினால் காங்ரஸிலும் அதன்மூலமாயும், இங்கிலாந்தைத் தன் சரித்திரத்திற்கும், பழக்கத்திற்கும், ஸ்வபாவகுணங்களுக்கும் உண்மையாயிருந்து, பிறப்புரிமையுடன்பிறந்த பிரிட்டிஷ் பிரஜைகளாகிய நமக்கு நம் சுதந்தரங்களை வழங்கவேண்டுமென்று நாம் கேட்கிறோம்"

பொதுஜன நன்மையைக்கோரிய தீர்மானங்களுக்குப் பிறகு இரண்டாவதுகாங்ரஸ் முடிவேறியது.

மூன்றாவது காங்ரஸ்.

(1887ஷு: இடம், சென்னை: வரவேற்புக்கமிட்டி அக்ராசனர், ராஜா சர் டி. மாதவராவ்: பிரதிநிதிகள் எண்ணிக்கை 607: அக்ராசனர், பத்ருடீன்டையாப்ஜி. முதல்காங்ரஸ் அக்ராசனர் ஓர்ஹிந்து, இரண்டாவது பார்சி, மூன்றாவதுமுசல்மன். இது என்மைந்தர்களின் ஐக்கியபாவத்தையும் ஒற்றுமையையும் குறிக்கிறது.)

அக்காலத்தில் காங்ரஸ்சபையில் அங்கத்தினர்களா யிருப்பவர் களிடத்தில் கவர்ன்மெண்டாருக்கும் இதாளுக்கும் சில சந்தேக ங்க ளிருந்துவந்தன. காங்ரஸ் அங்கத்தினர்கள் "இராஜ அவிஸ் வாஸிகள்" என்றழைக்கப் பட்டார்கள். அதற்கு என் சிறியநண்பர் மிஸ்டர் எர்ல்ட்லே நார்டன் தைரியமாயும் புத்திசாலித்தனமாயும் சொன்னபதில் பின் வருமாறு.

"இடுக்கண்களைச்சகிக்க மாட்டோம் என்று சொல்வதும், ஜனங்களுக்கு அவர்கள் விவகாரங்களில் அவர்கள் தேசத்தின் ஆக்ஷியில் நியாயமான ஓர் அக்கு ஏற்படவேண்டும் என்று சொல் வதும், யதேச்சாதிகாரத்தை எதிர்ப்பதும், அடக்குமுறைகளைக் கண்டிப்பதும், தண்டனை விதிப்பதற்குமுன் விசாரணை வேண்டுமென்று வற்புறுத்துவதும், அநீதிக்கு இடங்கொடுக்கா மல் கிளர்ச்சி செய்வதும், மனிதனின் சுதந்தரங்களை யாதரிப்ப தும், படிப்படியாய் விசாலிக்கும் சீர்திருத்தங்களைக் கேட்க உரிமை யுண்டென்று யாவராலும் அங்கீகரிக்கப் பெற்றதை ஸ்திரப்படுத்து வதும், இராஜ அவிஸ்வாசமானால், என்னை இராஜ அவிஸ்வாசி என்றழைப்பதில் எனக்கு வெகு சந்தோஷம் இரண்டு மூன்று பங்கு சந்தோஷம்."

எனக்கு சுயராஜ்யம் செய்யத் தெரியு மென்றும், அதைப் பற்றி பெரிய ஆங்கிலேய கவர்னர்களும் மந்திரிகளும் யோக்கியதா பத்திரங்கள் அளித்திருப்பதாயும், ஜனநாயக ஆக்ஷியே நாகரீக ஆக்ஷியென்றும், கானடா, ஆஸ்டிரேலியாபோன்ற பிரிட்டிஷ் கால னிகளுக்குச் சுதந்தாம் கொடுத்து, இந்தியாவிற்குக்கொடுக்காதது இங்கிலாந்தின் சுதந்தர வாழ்க்கையின் சொரூபத்திற்கு விரோத மென்றும், சுதந்தரத்தை வழங்கினால் இந்தியா இராஜபக்தியுடனும் நன்றியறிவுடனும் பிரிட்டிஷ் ஆதீனத்தில் ஒத்துழைக்குமென்றும், பார்லிமெண்டில் இந்தியாவின் விவகாரங்களைக் கவனிக்கக்கூடிய அறிவாளர்களும் சிரத்தையும் ஓய்வும் இல்லை என்றும் அதற்குத் திருஷ்டாந்தமாக மிஸ்டர் பிராட்லாவின் பிரசங்கத்தை மேற்கோ ளாகக்காட்டியும் விசேஷ அற்புதமான பிரசங்கங்கள் நடைபெற் றன.

அடுத்த படியாய் ஜனங்களுக்கு யுத்தப் பயிற்சி அவஸ்யம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் துப்பாக்கிகளை வைத்துக் கொள்ளும் உரிமை இந்தியர்களுக்கு வழங்கப்படவேண்டு மென்

றும், அப்படிச் செய்யவேண்டியதின் அவஸ்யத்தையும், செய்யாவிட்டால் விளையக்கூடிய கெடுதிகளையும் இதா இதங்களையும் சர் சங்கரன் நாயரும், நரேந்திரநாத் சென் ராவ் பகதூர் சபாபதி முதலியார் பாபு விபன சந்த்ரபால் போன்றவர்கள் வெகு தீரமாய் எடுத்துரைத்தனர்.

நான்காவது காங்ரஸ்.

[1888வு, அலகாபாத்து, பிரதிநிதிகள் 1248, வரவேற்புக் கமிட்டி அக்கிராசனர், பண்டித அயோத்யநாத். காங்ரஸ் அக்ராசனர், யூல்.]

முதல் மூன்று காங்ரஸ்களும் நடைபெற்ற முறையையும் நாளுக்குநாள் காங்ரஸ் அபிவிர்த்தியுடைந்து என் மைநதர்களின் பிரதிநிதி சபையாய் விளங்கி வருவதையும் கண்ணுற்ற சர்க்காரும், ஆங்கிலோ இந்திய பத்திரிகைகளும் காங்ரஸிடத்தில் வெறுப்புக்கொண்டு, அதைக் கண்டபடி எதிர்த்தார்கள். அது நான்காவது காங்ரஸில் வெட்டவெளிச்சமாய்த் தெரிந்தது. லார்டு டபெரின் இந்தியாவைவிட்டுப் போகும்பொழுது "காங்ரஸ் இராஜ அவிஸ்வாஸத்தைப் புகட்டும் சபை" என்று சிறப்புப்பெயரைச் சூட்டினர். அலகாபாத்தில் அதிகார்ரிகள் காங்ரஸ் கூடுவதற்கு இடங்கொடுக்காமல் தடுக்க எவ்வளவோ புத்திசாலித்தனமாய் முயற்சி செய்தும், பயன்படவில்லை. வெகு கஷ்டப்பட்டு வரவேற்புக் கமிட்டியார் விடாமுயற்சியாலும் தைரியத்தாலும் பிரம்மாண்டமான ஓர் இடத்தை வாடகைக்குப் பெற்று காங்கரஸை நடத்தியே விட்டார்கள். காங்ரஸுக்கு விரோதமாய் அநேக சபைகள் இக்காலத்திலேற்பட்டிருப்பதுபோல், அக்காலத்திலும் தோன்றின. காங்ரஸ் அங்கத்தினர்கள் அநேக கஷ்டங்களுக்காளாகினர். இக்காலத்தைப்போல் அக்காலத்திலும் அவர்களில் பலர் நன்னடக்கை ஜாமீன் கேட்கப்பட்டார்கள். இப்படிச்செய்ததினுல் காங்கிரஸ் பலமுற்று செல்வாக்கையடைந்ததே தவிர, பலஹீனமடைந்து அழியவில்லை. அடக்குமுறைகள் என்றும் எத்தேசத்திலும் எந்த எண்ணத்தோடு கையாளப்படுகின்றனவோ அவ்வெண்ணத்திற்கு நேர்மாறான முடிவைத்தான் கொடுக்குமென்பதை அதிகாரிகள் உணரவில்லை. இங்கிலாந்தையும் இந்தியாவையும் ஒன்றாய்ச் சேர்த்து, யாவராலும் பிரிக்கமுடியாத ஐக்கியபாவத்தைச் சம்பாதித்து, அதன் மூலமாய் பூலோக சமாதானத்தையும் இருதேசங்

களின் க்ஷேமத்தையும் ஸ்திரப்படுத்த ஒரேமார்க்கம்தான் உண்டு. அஃதாவது இந்தியர்களிடத்தில் நம்பகமவைத்து அவர்களை சுய ஆக்ஷி செய்யும்படி விடுதலேயாம்! நன்றிமறந்தவர்களுக்கு உய் வில்லை என்பது இந்தியாவின் சமூகவாழ்க்கையின் தர்மம். அதுவே என் புதல்வரின் மகா மந்திரமாகும். நன்றிபாராட்டும் ஸ்வபாவம் என் தேசத்திற்கு இயற்கைக்குணம், எனெனில் இக்குணம் என் றும் அழியா மதக்கொள்கையில் வேரூன்றியிருக்கிறது. எனக்குப் பரம விரோதியாயிருப்பவன் எனக்கு ஏதாவது கிஞ்சித்து உபகாரம் செய்தால், அவ்வுபகாரத்திற்காக என் மைந்தர்கள் அவனைப் பூஷிப் பார்கள். இதைத் துரைத்தனத்தார் அறியாமல் அவநம்பகத்தால் என் கௌரவத்திற்கும் அவர்கள் சாஸ்வதமான நன்மைக்கும் பொதுவாய் பூலோக நன்னடக்கைக்கும் விரோதமான ஓர்குறுகிய நோக்கத்தையுடைய ஆக்ஷிமுறையைக் கையாண்டு வருகிறார்கள். ஆனால் அதை நான்சொல்வதில் என்ன பயன்? அவர்களே அதை யுணருங்காலத்தில் தான் நான்செய்யும் எச்சரிக்கை மதிப்புறும். அஃதிருக்கட்டும். என்கதையைக் கூறுகிறேன்.

வரவேற்புக்கமிட்டி அக்ராசனம் பண்டித அயோத்தியநாத் செய்த பிரசங்கத்தில் சர் ஆக்லண்டு கால்வின் லார்டுடபெரின். ஆகிய இருவர்கள் காங்ரஸின்மீது சுமத்திய அபாண்டங்களைக் கண்டித்தார்.

காங்ரஸ் அக்ராசனர் ஜனப் பிரதிநிதித்வத்தைப் பற்றியும், அதன் அவசியத்தை 1858ஸு கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொண் டிருப்பதாகவும், இந்தியர்கள் விசேஷ வியாபாரஞ்செய்தும் அவர்க ளில் ஒருவருக்காவது சட்டதிட்டங்க ளமைப்பதில் யாதொரு சுதந் தரமுமில்லை என்றும், மொத்தத்தில் இந்தியா 7,70,00,000 பவுன் வருஷத்தீர்வை கொடுத்த போதிலும் ஒருவனுக்காவது அதைச் செலவழிக்கும் வழியைக்கவனிக்க அக்கு இல்லை என்றும், இந்தி யாவில் 33,00,000 மாணவர்களிருக்கிறார்களென்றும் அவர்களை நம்பாமல், அவர்களைக் 'குட்டி தேசத் துரோகிகள்' என்றழைக்கி றார்களென்றும் தெளிவாய்ப்பிரசங்கஞ் செய்தார்.

வழக்கம்போல் பலதீர்மானங்கள் நிறைவேறின. இக்காங் ரஸில்தான் லாலாலஜபதிராய் முதல் முதல் சட்டசபைகளுக்கு இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்பதைப்பற்றிப் பேசினார்.

ஐந்தாவது காங்ரஸ்.

[இடம் பம்பாய், வரவேற்புக்கமிட்டி அக்ராசனர், பிரோஸ் ஷா மேதா. காங்ரஸ் அக்கிராசனர், சர்வில்லியம் வெட்டர்பர்ன்: பிரதிநிதிகள் எண்ணிக்கை 1889. இந்தியாவின் நண்பரும் மனச்சாக்ஷிக்காக விசேஷ போராட்டஞ் செய்தவருமாகிய மிஸ்டர் சார்லஸ் பிராட்லா காங்ரஸுக்கு விஜயஞ்செய்தார். அவரை வெகு குதூகலத்துடன் ஜனங்கள் வரவேற்றனர். பலவகையான உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர்களும் வர்த்தகர்களும் ஜமீன்தார்களும் காங்ரஸுக்கு விஜயஞ்செய்தனர்.]

சர்வில்லியம் வெட்டர்பர்ன் தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் சொல்லியதாவது:—

ஈஸ்ட் இந்தியா கம்பெனி இந்தியாவை யாண்டகாலத்தில் அரசாக்ஷி நன்ருய் நடப்பதற்காக ஏற்பட்டிருந்த கண்காணிப்புகளும் இதரவசதிகளும் 1858ல் கம்பெனியாரிடத்திலிருந்து பார்லிமெண்டிற்கு ஷை அரசாக்ஷி மாறியபோது எடுபட்டுப்போனபடியால் அதுமுதற்கொண்டே இந்தியாவின் கஷ்டங்கள் அதிகரித்தன. அதுமுதற்கொண்டு இந்தியாவின் ஆக்ஷி பொறுப்பற்றதாய்விட்டது. உதாரணமாக லார்டு ரிப்பன் விவசாயபாங்க்கள் சம்பந்தமாக எழுதியனுப்பிய ஏற்பாடுகள் இந்தியா ஆபீசில் நிராகரிக்கப்பட்டன. காங்ரஸ்வேலை மெச்சத்தகுந்தது. இங்கிலாந்திற்கு இந்தியாவிலிருந்து புறப்படப்போகும் டெபுடேஷன் அவச்யமென்றும், அதன் உழைப்பினுல் நன்மை ஏற்படுமென்றும் சந்தோஷித்தார்.

விசேஷ தீர்மானங்களில் முதன்மையாய்ப் பேசக்கூடியது ஒன்றுண்டு. அஃதாவது சட்டசபை சீர்திருத்தச் சம்மந்தமாக மிஸ்டர் பிராட்லா தயாரித்த மசோதாவைப்பற்றியது. மிஸ்டர் நார்டன் "நம்விவகாரங்களை நாமேநடத்திக்கொள்ளவும், தீர்வை விகிதங்களைக் குறிப்பிட்டவரையில் நாமே தீர்மானிக்கவும், வரவு செலவு திட்டங்களைப் பரிசீலனைசெய்யவும், பொது விவகாரங்களைப்பற்றிச் சட்டசபையில் மெம்பர்கள் கேள்விகள்கேட்கவும்" இந்தியர்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்று பேசினுர். பண்டித அயோத்தியநாத், ஜி. சுப்பிரமணிய அய்யர், விபினசந்திரபாலர், லாலாலஜபதிராய், பண்டித மதன்மோகன் மாளவியா,

சுரேந்திர நாத் பானர்ஜி எனையோர்கள் அதை ஆதரித்துப்பேசினர்.

பிராட்லா மசோதாவில் 5-வது பிரிவிற்கு திலகர் திருத்தப் பிரேரணை செய்ததை கோகலே ஆதரித்தார். அதாவது இம்பீரியல் கவுன்சிலுக்கு (வைசிராய் சட்டசபைக்கு) ப்பிரதிநிதிகள் மாகாண கவுன்சில் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்பது. அது தோற்றுப்போய்விட்டது. ஸிவில் உத்தியோக சம்பந்தமாய் சர்விஸ் கமிஷன் சிபார்சுகளைக் கண்டித்துப் பேசும்பொழுது ஜி. கே. கோகலே பின்வருமாறு தைரியமாயும் அழுத்தமாயும் பேசினர்.

“உத்தியோக உயர்வில் இந்தியனுக்கு ஜாதி, நிற, மதபேதங்களில் யாதொருதடையு மிருக்கக்கூடாது என்ற வாக்குறுதிகொடுத்து 56-வருடங்களாயின. அவ்வுத்தமமான வாக்குறுதி இன்னும் பலமாக 1858-ஞு அறிக்கைபத்திரத்தில் திரும்பவும் கூறப்பட்டுள்ளது. 1833-ஞு சட்டமும் 1858-ஞு பிரகடனமும் சந்தேகத்திற்கிடமில்லாமல் ஏற்பட்டிருப்பதால், அவைகளினுல் கிடைக்கக்கூடிய சுதந்தரங்களை நமக்கு இல்லை என்போர் பொய் அல்லது நம்பகத் துரோகம் என்னும் இரண்டிலொரு சங்கடத்திற்காளாகிறுர்கள். மேற்கூறிய வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட காலத்தில் இங்கிலாந்து அவைகளை உண்மையாய்ச் சொல்லவில்லை என்றுவது அல்லது சொன்னசொல்லை இப்பொழுது காப்பாற்றவில்லை என்றுவது ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

கனவான்களே ஓர் ஆங்கில நியாயாதிபதி நான் பின்னுல்சொன்னதை ஒப்புக்கொண்டு 1858ஞு பிரகடனம் முகந் துடைப்பதற்காகச் செய்த ஓர் அறிக்கை என்றதை நீங்கள் அறிந்திருக்கலாம். ஆனுல் அவரைப்போன்றவர்கள் இங்கிலாந்தில் அநேகர் இரார்கள் என்றெண்ணுகிறேன்.

1833, 1858 சத்திய வாக்குறுதிகளை முன்னிட்டு, அவைகளைப் பூர்த்திசெய்ய நிரந்தரமாய் அபிவிர்த்தி யடையக்கூடிய மனப்பான்மையைக் காட்டவேண்டுமென்று கேட்க நமக்குச் சுதந்தரமில்லையா?”

அரசாக்ஷி சீர்த்திருத்தம், நிலத்தீர்வை, இது போன்ற விஷ

யங்களைப் பற்றி ஜனானுகூலமான தீர்மானங்கள் நிறைவேறின. உத்தம தேசாபிமானிகள் உயர்ந்த நோக்கத்துடனும் ஆழ்ந்த புத்தியுடனும், விசாலமான அனுபவத்துடன் தேன் சொரியும் வசனங்களாலும் அழகிய வாக்கியங்களாலும், ஸ்துதியாகவும் நிந்தாஸ்துதியாகவும், குறி சொல்வதுபோலவும், எச்சரிக்கைசெய்வது போலவும், சுதந்தரத்துடன் கேட்பதுபோலவும், அதைரியமடைந்து கெஞ்சுவது போலவும் பலவாருகப் பேசியும், புகழ்ந்தும் ஒன்றும் பயன் படவில்லை. எண்ணெய்க்குக் கேடேயொழிய பிள்ளைபிழைப்பதில்லை. துரைத்தனத்தாரும், காங்ரஸ் சொல்வதைச் செவிகொடுத்துக் கேட்காமல் சினங்கொண்டு கடிந்தனர்.

ஆருவது காங்ரஸ் 1890.

[இடம் கல்கத்தா. வரவேற்புக் கமிட்டி அக்ராசனர் மனமோகன் கோஷ். காங்ரஸ் அக்ராசனர் சர்பிரோஸ்ஷாமேதா. பிரதிநிதிகள் எண்ணிக்கை 677. பிரதி நிதிகள் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம் பிரதி மாகாணத்திற்கும் இவ்வளவு பேர்கள்தாம் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்று குறிப்பிட்டதுதான். ஜனங்கள் ஊக்கத்திற்கும் காங்ரஸின் மதிப்பிற்கும் யாதொரு குறைவு மில்லை.]

சர் பிரோஸ்ஷாமேதா அக்ராசனப் பிரசங்கத்தில், லார்டு சால்ஸ்பரி "கிழக்கிற்குப் பிரதிநிதித்வம் ஏற்காது. அவர்கள் மனோபாவத்திற்கும் அது ஏற்றதல்ல." என்று சொல்லியதைக் கண்டித்து, கிலேஷாம் ஆன்ஸ்டி "சுய ஆக்ஷிக்குத் தாய் கிழக்கே" என்று எழுதியிருப்பதை மேற்கோளாக எடுத்துக் காட்டி, வீணாக இந்தியரின் மனதை வருத்தமடையச் செய்யாமல், அவர்கள் கேட்கும் நியாயமான கோரிக்கைகளை இங்கிலீஷ்காரர்கள் எதிர்க்காமல் ஸ்நேக பாவத்துடன் ஒற்றுமைத்து இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் சாஸ்வதமான கூட்டுறவு ஏற்படப் பிரயத்தனஞ் செய்யுமாறு வேண்டிக்கொண்டார்.

பழையபடி தீர்மானங்கள், பிரசங்கங்கள், வேண்டுகோள்கள் வந்தனங்கள் — ஆருவது காங்ரஸ் நிறைவேறியது. தற்போது

காங்ரஸ் வேலைக் கமிட்டியின் தீர்மானங்களுக்கிருக்கும் மதிப்பையும் பழைய காங்ரஸின் மதிப்பையுங் கவனித்தால் வித்தியாசம் தெரியும். ஆனால் ஆறுவயதுள்ள குழந்தைக்கும் 38 வயதுள்ள தீரனுக்கும் உள்ள வித்தியாசத்தையும் நாம் கவனிக்கவேண்டும்.

7-வது காங்ரஸ் 1891.

[இடம் நாக்பூர். வரவேற்புக்கமிட்டி அக்ராசனர் சி. நாராயண சாமி நாயுடு. காங்ரஸ் அக்ராசனர் பி. ஆனந்தாச்சார்லு. பிரதிநிதிகளின் எண்ணிக்கை 812.]

அக்ராசனர் ஆனந்தாச்சார்லு பிரசங்கத்தில் சொல்லியதின் சாராம்சம்:

> "கனம். சுப்பிரமணிய அய்யர் சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ் பதவியை ஏற்றுக்கொண்டார். அதனால் அவர் காங்ரஸில் பிரவேசிக்க முடியாமற்போயிற்று. மிஸ்டர் பிராட்லா இறந்துவிட்டார். அது இங்கிலாந்தில் காங்ரஸின் பலக்குறைவிற்குக் காரணம். அவர் மசோதாவும் அவருடன் போயிற்று. சர். டி. மாதவராவ், டாக்டர் ராஜேந்திரலால் மித்திரா ஆகிய இருவரும் விண்ணுலகமெய்தினர். A. O. ஹ்யூம் அவர்களும் இங்கிலாந்திற்குப் புறப்படுகிறார். இவைகளைக் குறிப்பிட்டு லண்டனில் காங்ரஸ் கூடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று" காங்ரஸ் அக்ராசனர் அவர்பிரசங்கத்தை முடித்தார்.

தற்காலத்தில் லண்டனில் காங்ரஸ் கூடவேண்டும் என்றால் பொது ஜனங்கள் நகைப்பார்கள். அப்படிப்பட்ட விஷயங்களிலும் அந்நியர் உபகாரத்திலும் இந்தியர்களுக்குத் தற்போது மதிப்பற்றுப்போய் விட்டது. உதாரணமாக இங்கிலாந்தில் "இந்தியா" என்றபெயர் புனைந்த வாரப்பத்திரிகையையும், பிரிட்டிஷ் காங்ரஸ் கமிட்டியையும் வேண்டியதில்லை என்று காங்ரஸ் இரண்டு வருடங்களுக்கு முன் தீர்மானித்துவிட்டது. அந்நிய நாடுகளில் இந்தியாவின் சுதந்தரத்தைப்பற்றிப் பிரசங்கங்களும் நடைபெறவேண்டும் என்கிற எண்ணமும் அறவே மாறிவிட்டது. இக்காலத்தில் காங்ரஸ் சுய நம்பிக்கையைக் கொண்டு தன் எண்ணங்களைப் பூர்த்திசெய்யப்

பிரயத்தனப்படுகிறது. ஆனால் அக்காலத்தில் காங்ரஸ் தலைவர்கள் என்ன யோசித்தார்களென்றால், "இங்கிலாந்திற்கு இந்திய ஆக்ஷியின் குறைகளும் குற்றங்களும் தெரியவில்லை. தெரிந்தால் அவைகளை இங்கிலீஷ்காரர்கள் ஒருநொடியில்போக்கிவிடுவார்கள். ஆகையால் இங்கிலாந்தில் காங்ரஸ் கூடவேண்டும்." இம்மாதிரியே இன்னும் பல மிதவாதிகள் நம்புகிறார்கள். 30 வருட அனுபவம் அவர்கள் மனப்பான்மையை சிறிதும் மாற்றவில்லை.

பொது விவகாரங்களைப் பற்றியும், அவ்வப்போது நேரிடும் அரசியல் குறைகளைப்பற்றியும் சென்ற வருஷத்திய தீர்மானங்களை வற்புறுத்தியும், மாற்றியும், விசாலித்தும் தீர்மானங்கள் செய்தபின் 7-வது காங்ரஸ் சபைகலைந்தது.

8-வது காங்ரஸ் 1892.

[இடம், அலகாபாத் வரவேற்புக்கமிட்டி அக்ராசனர், பிஷம்பாநாத்: காங்ரஸ் அக்ராசனர், W. C. பானர்ஜி: பிரதிநிதிகள் எண்ணிக்கை 625. பண்டித அயோத்யநாத், ஜார்ஜ் யூல்—உத்தமதேசாபிமானிகள்—ஸ்ரீமன் நாராயணன் திருவடிகளையடைந்தார்கள்.]

பிஷம்பர்நாத் தமது பிரசங்கத்தில் "இந்தியாவைப்பற்றி இங்கிலாந்து செருக்கடையக் கூடியதினம் உதித்துவிட்டதென்றும், இந்தியர்கள் சுய நம்பிக்கையாலும் சுய நிர்ணயத்தாலும் தங்கள் பிறப்புரிமைகளை நியாயவரம்பிற்கு உட்பட்டு நிதானமாயும் மரியாதையாயும் கேட்கிறார்களென்றும், அதிகாரிகளை யொழிக்கவே காங்ரஸ் ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவோர் மகத்தான பாவத்திற்கு ஆளாகிறார்களென்றும், காங்ரஸ் மேலும்மேலும் ஊக்கத்துடன் தன் நோக்கங்கள் காரிய சித்தியடையும் வரையில் இடைவிடாமல் கிளர்ச்சி செய்யவேண்டும்" என்றுசொன்னார்.

W. C. பானர்ஜி தமது அக்ராசனப் பிரசங்கத்தில் தாதாபாய் நவரோஜி பார்லிமெண்டிற்கு மெம்பராய் தேர்ந்தெடுக்கப் பெற்றதைப்பற்றித் தாம் சந்தோஷமடைவதாகவும், அரசியல் ஒழுங்கீனங்களைக் கண்டித்தும் முடிவில்

"நம்கிளர்ச்சி "சுதேசி" க்கிளர்ச்சியென்றும், ஆகையால் இக்கிளர்ச்சியை அதிகாரிகள் கவனிக்கவேண்டியதில்லை என்றும்

சிலர் சொல்கிறார்கள். நமது சகோதர ஐரோப்பியர்கள் நம்முடன் சேராததினால், ஏன் நமது வார்த்தையைக்கேட்கக்கூடாது? நமது ஐரோப்பிய சகோதரர்களின் உதவியை நாம் மனப்பூர்த்தியாய் ஒப்புக்கொள்கிறோம். அவர்களால் நமக்கு எவ்வளவு உதவிபுரியக் கூடுமோ அவ்வளவையும் அவர்கள் செய்யட்டும். அது ஒருபுற மிருக்கட்டும். நமதுவார்த்தையை ஏன் அதிகாரிகள் செவிகொடுத்துக் கேட்கக்கூடாது? ஐரோப்பியருடன் இந்தியர்கள்சேர்ந்து சீர்திருத்தங்கள் கேட்டகாலத்தில் அப்பொழுது "அவர்கள் சொல்வதைக் கேட்காதீர்கள். அது இந்தியர்கள் கோரிக்கையல்ல. சில அதிருப்தியடைந்த ஐரோப்பியர்கள் அவ்வண்ணஞ் செய்கிறார்கள்" என்றார்கள். கஷ்டநிஷ்டூரங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கும் இந்தியர்களே கிளர்ச்சிசெய்தால் "அது சுதேசிகள் கிளர்ச்சி! அதைப் பொருட்படுத்த வேண்டாம்" என்கிறார்கள்." என்ற பதிலுடன் அவர் பிரசங்கத்தை முடித்தார்.

"இந்திய சட்டசபைகள் பில்லை" ப்பற்றி முதல்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதை ஆநந்தாசார்லு பிரேரணைசெய்தார். சுரேந்தரநாத் பானர்ஜி அதை ஆதரித்தார். அதன்சாராம்சம் "நாங்கள் ஷை இந்தியா சட்டசபை பில்லை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் பிரதிநிதிகள் இந்தியர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்கிற தத்துவத்தை ஒப்புக்கொள்ளாததற்கு நாங்கள் வருத்தமுறுகிறோம்" என்பது.

கோகலே இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏககாலத்தில் ஐ. சி. எஸ் பரீக்ஷை நடக்கவேண்டும் என்பதைப்பற்றி வெகு கோபத்துடனும் வேகத்துடனும் பேசினார். இப்படிப் பேசியதற்காக ஸி.ஐ. டி. போலீஸ்காரர்கள் கோகலேயின்பின் சென்று அவர் நடத்தைகளை இரகசியமாய் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தி வந்தார்கள். மாளவியா பெரிய உத்தியோகங்கள் ஐரோப்பியரால் வகிக்கப்படுவதால் விசேஷ பணச்செலவாகிறதென்றும், இந்திய வாலிபர்களை 10,000 மைலுக்கப்பால் சென்று ஐ. ஸி. எஸ். பரீக்ஷை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவது கொடுமையானதென்றும், இந்தியர்கள் தயவைக் கேட்கவில்லை, நியாயத்தைத் தான்கேட்கிறார்களென்றும் தீவிரமாய்ப் பேசினார்.

D. E. வாச்சா பொக்கிஷ இலாகாவிலும், இராணுவ இலாகாவிலும் நிபுணர். அவர் நாணயங்களைப் பற்றிப்பேசினார். காங்ரஸில்

அக்காலத்தில் பேசியவர்களெல்லாரும் இந்திய விவகாரங்களிலே யேயன்றிப் பூலோக விவகார்ங்களையும் ஐரோப்பா, அமெரிக்கா ஜப்பான்போன்ற தேசங்க்ளின் பொது விவகாரங்களையும் செவ்வனே படித்து வந்ததால், அவர்கள் பிரசங்கங்கள் எவ்விதத்திலும் மதிப்புற்றன. இக்காலத்து பிரசங்கிகளும் பிரசாரகர்களும் அவர்களைப்போல் விஷய புஷ்டியுடனும், தீர்க்காலோசனையுடனும் பேசத்துணியவேண்டும்.

இந்திய இராணுவச் செலவில் ஒரு பாகம் இங்கிலாந்து வகிக்கவேண்டுமென்று வாச்சாவும் மாளவியாவும் தீர்மானஞ்செய்தார்கள்.

9-வது காங்ரஸ் 1893.

[இடம், லாகூர். வரவேற்புக்கமிட்டி அக்ராசனர், சர்தார் தயால் சிங். அக்ராசனர் தாதாபாய் நவரோஜி. பிரதிநிதிகள் 857. காங்ரஸை ஸ்தாபித்தவர்களில் ஒருவராகிய K. T. திலாங்கு இறந்துவிட்டார்.]

"தாதாபாய் நவரோஜி வெகு அற்புதமான ஓர் அக்ராசனப் பிரசங்கஞ் செய்தார். அதன் சாராம்சம்: "நான் காங்ரஸுக்கு வந்தனமளிக்கிறேன். இந்தியச் சட்டசபையைப்பற்றிய சட்டத்தில் கேள்விகேட்கும் சுதந்தரம், கொஞ்சம் பிரதிநிதித்வம்போன்ற அனுகூலமான சிலபாகங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் இந்தியப் படிப்பாளிகளிடத்தில் அவநம்பிக்கை வைக்காமல் அவர்களை விஸ்வாஸித்து அவர்களை தேச அரசாக்ஷியில் ஈடுபடும்படி செய்ய வேண்டும். அவர்களைப் பகைவர்களாகும்படி அதிகாரிகள் நடந்துகொள்ளக்கூடாது. இந்தியாவின் தரித்திரம் ஆக்ஷி முறையின் அமைப்பினால் ஏற்படுகிறதேயொழிய தனிப்பட்ட அதிகாரிகளால் ஆக்கப்படுகிறதில்லை. ஆங்கில உத்தியோகஸ்தர்களின் ஆக்ஷி முறையைக் கண்டித்தால், தங்களையே கண்டிப்பதாய்க் கோபமடைகிறார்கள். இந்தியாவின் தரித்திரத்தைப் போக்கவேண்டும். இந்தியா செழிப்படைந்தால், அரைடஜன் ருஷியாக்களை வெருட்டியடிக்கலாம். அப்பொழுது இந்தியர்கள் தேசபக்தர்களாய்க் கடைசி வரையில் இங்கிலாந்து கக்ஷியில் சேர்ந்து யுத்தம்புரிவர். கூலிப் படையாயிருக்கமாட்டார்கள். அதிகாரிகள் தரையின்மேல் காலைத்தட்டினால்போதும். லக்ஷக்கணக்கான இந்தியர்கள் கவர்ன்மெண்

டையும் தங்கள் தேசத்தையும் பாதுகாக்க உடனே எழுந்தோடிவருவார்கள். நாங்கள் இங்கிலாந்திற்கு விரோதிகளாயிருந்தால், இம் மாதிரிகிளர்ச்சி செய்யாமல் சும்மாவிருந்து ஆபத்தாய்முடியும் வரையில் பார்த்துக்கொண்டிருப்போம். ஆனால் ஆபத்து நேரிடக் கூடாதென்று நாங்கள் கோருவதால் கவர்ன்மெண்டிற்காகவும் தேசத்திற்காகவும் முறையிடுகிறோம். தரித்திரத்தைப்போக்க தைரியமாய் வேலைசெய்து அதை நிவர்த்தி செய்யவேண்டும்.''

தாதாபாய் சொல்லி வெகு காலமாயும் தரித்திரம் நீக்கப்படாமல் நாளுக்கு நாள் அது அதிகரித்து வருகிறது.

1892ஆலத்திய சட்டசபைகள் சட்டத்தைக் காங்ரஸ் கண்டித்து அதனால் ஏமாற்றமடைந்ததாகத் தெரிவித்தது. பார்லிமெண்டு ஒருமாதிரியான சபை. ஜனங்கள் கோரிக்கையில் நாலிலொருபாகம் கொடுப்பதாய்ச் சில பிடிப்புகளுடனும் சுழல்களுடனும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து அதை அமுலுக்குக்கொண்டு வருவதற்கு விதிகளைத்தயாரிக்கும் அதிகாரத்தை வைஸிராய்க்குக் கொடுத்துவிடுகிறது. இம்மாதிரி செய்வதினால் சட்டப்படி நாலிலொருபாகம் விளையக்கூடிய நன்மையும் இந்தியக் கவர்ன்மெண்டார் தயாரிக்கும் விதிகளால் எடுபட்டுப்போகிறது. பார்லிமெண்டு ஏமாற்ற வேண்டும் என்கிற எண்ணத்தோடு அப்படிச் செய்கிறதில்லை. அதற்கு முதலாவது ஒழிவில்லை. இரண்டாவது அதற்கு இந்திய அரசாக்ஷியைப்பற்றிப் போதுமான அறிவில்லை. இந்த இரண்டு காரணங்களினால் விதிகளைத்தயாரிக்கும் அதிகாரம் இந்தியக் கவர்ன்மெண்டிற்குக்கிடைக்கிறது. இவர்களுக்கு மனது தாராளமில்லை. ஆகையால்தான் பார்லிமெண்டின் நல்லெண்ணமும் இந்தியக் கவர்ன்மெண்டாராலும் இந்தியா கவுன்சில் மந்திரியாலும் தயாரிக்கப்படும் விதிகளால் மாற்றப்படுகின்றது.

இந்தக்காங்ரஸில் கவனியாத விஷயம் கிடையாது. அநேக தீர்மானங்கள் நிறைவேறின. அவைகளை எல்லாம் இவ்விடத்தில் குறிக்க இடமில்லை. காங்ரஸின் அபிவிர்த்தியைமாத்திரமே சுருக்கமாய் ஈண்டுகுறிக்கிறேன்.

10-வது காங்ரஸ் 1894.

[இடம் சென்னை. வரவேற்புக் கமிட்டி அக்ராசனர்

P. ரங்கய்ய நாயுடு. பிரதிநிதிகள் 1163. அக்ராசனர் ஆல்பெர்ட் வெப்.]

வரவேற்புக் கமிட்டி அக்ராசனர் P. ரங்கய்ய நாயுடு காங்ரஸின் செல்வாக்கு; அதன் எதிரிகளின் பலம் இவைகளைப்பற்றியும் அதிகாரிகளுக்கும்படிப்பாளிகளுக்கும் தோன்றியுள்ள அபிப்பிராய பேதங்களையும் ஜீவனோபாயத்திற்காக இந்தியாவிற்கு வரும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கு இங்கே சாஸ்வதமான பற்றும் விஸ்வாசமும் ஏற்படாதென்றும், தேசத்தின் மொத்த வருமானத்தில் ¼ பாகம் இராணுவச் செலவென்றும், சுயேச்சையான வர்த்தகக்கொள்கைகளினால் இந்தியாவின் புராதன கைத்தொழில்கள் அழிந்தனவென்றும், ஜனங்களுக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை என்றும், தேசத்தின் தரித்திரம் வருடாவருடம் அதிகரித்து வருகிறதென்றும் பிரசங்கஞ் செய்தார்.

அக்ராசனர் இந்தியத் தீர்வையிலிருந்து ¼ பாகம் இந்தியாவிற்கு வெளியே செலவாகிறதென்றும், இம்மாதிரியான செலவை எந்தத் தேசமும் நிரந்தரமாய் சுமக்கமுடியாதென்றும், தீர்வை, விளைச்சல்கள், பிரதிநிதித்வம் இவைகளைப்பற்றி முன் காங்ரஸில் கூறிய தத்துவங்களையும் இடுக்கண்களையும் தொகுத்துப் பிரசங்கஞ்செய்தனர்.

11-வது காங்ரஸ் 1885.

[இடம் புனா. வரவேற்புக்கமிட்டி அக்கிராசனர் V. M. பைட். பிரதிநிதிகள் 1584. அக்ராசனர் சுரேந்தரநாத் பானர்ஜி.]

அக்ராசனர் பானர்ஜி காங்ரஸைப்பற்றி "இந்தக் காங்ரஸ் ஐக்கிய இந்தியாவின் காங்ரஸ். இந்துக்களும், முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், பார்ஸிகளும், சீக்கர்களும், சமூகவாழ்க்கையின் ஆசார சீர்திருத்தஞ் செய்வோரும், செய்யாதாரும் இதில் கலந்திருக்கிறார்கள். இங்கே நாமெல்லோரும் ஒரேமேடையின் மீது நிற்கிறோம். சமாஜமதவித்தியாசங்களை இவ்விடத்தில் மறந்து நாம் ஒரே சக்ரவர்த்தியின் பிரஜைகளென்று ஒரே கவர்ன்மெண்டின் ஆதீனத்தில் வசித்துவருவதால் நம் யாவருக்கும் பொதுவான சுதந்தரங்களும் கஷ்டங்களும் இருக்கின்றனவென்பதை அறிந்து கொள்வதற்கே நாம் இங்குகூடியிருக்கிறோம். நம் சுதந்தரங்களை

விர்த்திசெய்வதற்கும் இடுக்கண்களைக் குறைப்பதற்கும் காங்ரஸை நாம் கூட்டியிருக்கிறோம்" என்று சொன்னதை ஜாதிச்சண்டையிலும் சமாஜ தர்க்கங்களிலும் விரதா காலக்ஷேபஞ்செய்ய விரும்புவோர் அவஸ்யம் கவனித்தல் உசிதம்.

தேசிய விவகாரங்களைப்பற்றி "1892ல் நிறைவேற்றப்பட்ட சட்டசபைகள் சட்டம் நமக்குப்போதுமான அக்குகளைக் கொடுக்கவில்லை. உதாரணமாக 7-கோடி ஜனசங்கையையுடைய வங்காளத்திற்கு 7-பிரதிநிதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். பிரதிநிதிகளுக்கு வரவுசெலவு திட்டங்களைப்பற்றிப் பேச உத்திரவு கொடுத்தார்களேயன்றி அவைகள் சம்பந்தமான யாதொரு தீர்மானத்தையும் அவர்கள் கொண்டுவரக்கூடாது. எல்லைப்புற யுத்தங்களாலும் இதரயுத்தங்களாலும் இராணுவச்செலவு அஞ்சத்தகுந்த மாதிரி அதிகரித்துவருகிறது. இராணுவ ஆக்ஷி சரியில்லாமலிருப்பதுடன் நம்மைக் கெடுத்துவிடக் கூடியதாயுமிருக்கிறது. ருஷ்ஷியா படை எழுச்சியைத் தடுக்கக்கூடிய எல்லை யாருஞ்செல்லக் கூடாத வெகு தூரத்திலுள்ள மலையுமல்ல, காமன்ஸ் சபையுமல்ல. ஆனால் திருப்தியோடுகூடிய இராஜபக்தியுடைய ஜனங்களின் மனதே அப்படையைத் தடுக்கக்கூடிய எல்லையாகும்." என்று உண்மையாகக்கூறினார். மேற்கூறியவைகள் இன்றைக்கும் பொருத்தமுடையவைகளா யிருக்கின்றன. இராணுவ ஆக்ஷி இன்னும் சரியானவழியில் திரும்பவில்லை.

சுரேந்தரநாத் பானர்ஜி பிரசங்கத்தில் தேர்ந்தவர். நல்ல படிப்பாளி. கேட்போர் மனதைத் தன்வயப்படுத்தும் திறமையுடையவர். ஆங்கில பாஷையில் ஆங்கிலேயர்களைவிட அதிக அழகாகவும் இனிப்பாகவும் பேசுபவர். அவர் அக்ராசனப்பிரசங்கத்தை இந்தியச் சிறுவர்கள் சிரத்தையுடன் படிக்கவேண்டியது அவசியம். இங்கிலாந்திற்கு நற்புத்தி புகட்டினார். இந்தியாவிற்குத் தைரியத்தைக் கொடுத்தார். இங்கிலாந்தின் சிறப்பையும் இந்தியாவின் புராதனத்தையும் கல்வி கேள்விகளையும் புகழ்ந்தார். அவைகளெல்லாம் துரைத்தனத்தாரால் அழகிய எட்டிக்காய்களாகக் கருதப்பெற்றனவேயொழிய மதிப்புறவில்லை. பயன்பெறாதது காங்ரஸின் குற்றமுமில்லை. பானர்ஜியின் குற்றமுமல்ல. இங்கிலாந்தின் அறியாமையே அதற்கு முக்கியகாரணம்.

12-வது காங்ரஸ் 1896.

[இடம் கல்கத்தா; வரவேற்புக் கமிட்டி அக்ராசனர். சர் ரொமேஷ் சந்த்ரமித்ரா. பிரதி நிதிகள் 784. அக்ராசனர் முகம்மது ரஹீம்துல்லா சாயனி. மான்மோகன் கோஷ் காலமானார்.]

சர் ரொமேஷ் சந்தரமித்ரா காயலாவாயிருந்ததால் டாக்டர் ராஷ் பேகாரிகோஷ் ஷையார் பிரசங்கத்தைப்படித்துப் பிரதிநிதிகளை வரவேற்றார். பிரசங்கத்தின் சாராம்சம்.

"இராஜ்யபாரம் கஷ்டமானதென்பது நமக்குத்தெரியும். அதிலும் அன்னியராக்ஷி அதைவிடக் கடினமானது. நாம் கவர்ன்மெண்டிற்கு உதவிபுரிகிறோம். அதற்குத்தீங்கு செய்யவில்லை. துரைத்தனத்தாரில் பலர் நம்மிடத்தில் சந்தேகத்தையும், விரோதத்தையும் பாராட்டுகின்றனர். இந்தியப்பிரஜைகளின் கஷ்ட நிஷ்டூரங்கள் அவர்களுக்கு நன்றாய்த் தெரியுமென்றும் காங்ரஸ் பிரதிநிதிகளுக்குத் தெரியாதென்றும் அவர்கள்கூறுவதை யாவரும் நகைப்பார்கள். பொது ஜனங்களுக்கு இந்தியப் படிப்பாளிகளே மேனாட்டு இராஜரீக முறைகளை யெடுத்தோத வேண்டுமேயல்லாது, எந்த அன்னியனும் ஜனங்களின் மனப்பான்மையையறிய முடியாது. காலம் கஷ்டமாய்விட்டது. தேசத்தில் பஞ்சமும் பிளேக்கும் பிறந்திருக்கின்றன."

அக்ராசனர் "முகம்மதியர்கள் சகோதரப் பான்மையுடன் காங்ரஸில் ஒத்துழைக்கவேண்டும். இந்தியாவின் நிலைமை பரிதாபகரமானது. தீர்வை பரிக்கமுடியவில்லை. பண சம்பந்தமாக இந்தியனுக்கும் இங்கிலீஷ்காரனுக்கும்பேதங்கள் இருக்கின்றன. இந்தியன் சம்பத்துகள் வெளியேசென்று தேசம் நாசமுறுகிறது. பிரிட்டிஷ் ஆக்ஷியில் ஒரு நூற்றாண்டிற்குள் ஏற்பட்ட வருமானக்குறைவும் தரித்திரமும் விசனத்தை யுண்டுபண்ணுகின்றன."

முன் காங்ரஸ் தீர்மானங்களை ஊர்ஜிதப்படுத்தியும், தரித்திரம், பஞ்சம் இவைகளைப் போக்கக்கூடிய மார்க்கங்களை யொட்டியும் தீர்மானங்கள் நிறைவேறின.

13 வது காங்ரஸ் 1897.

[இடம், அமராவதி. (பீரார்மாஹாணம்) வரவேற்புக் கமிட்டி அக்ராசனர் கபர்தே. பிரதி நிதிகள் 692. அக்ராசனர். சி. சங்கரன் நாயர்.]

கபர்தே வரவேற்கும் பொழுது செய்த பிரசங்கத்தின் சாராம்சம். "பஞ்சம் தேசத்தின் சீரைக்குலேக்கிறது. பல நூற்றாண்டுகளாகக் காணுத பிளேக் தாண்டவ மாடுகிறது. பரிக்கமுடியாத எல்லேப்புற யுத்தம் நம் பணத்தை விழுங்கி விட்டது. வெள்ளமும், தீயும், பூகம்பமும் தேசத்தின்பயத்தை அதிகரிக்கச் செய்தன. ஜனங்களும் கவர்ன்மெண்டும் மேற்கூறிய விபத்துகளேப் போக்க ஒத்துழைக்கிரூர்கள். விசனிக்கக் கூடிய இரண்டு கொலேகள் புனவில் நடந்ததால் கவர்ன்மெண்டிற்கு அவநம்பகம் மேலிட்டு, ஏதோ விசேஷ சதியாலோசனே கவர்ன்மெண்டைக் கவிழ்த்து விட நடந்து வருவதாயும், அதைத் தடுக்க பிராவிகூஷன்களும், வெளியூருக்கு ஜனங்களே "டிபோர்ட்டு" செய்வதும், கிரிமினல் ப்ரொஸீஜர் கோடை மாற்றி யமைக்க வேண்டு மென்பதையும் காண்கிரூம்."

சர் சங்கரன் நாயர் தமது அக்ராசனப்பிரசங்கத்தில்.

"சமாஜசண்டை சச்சரவுகளுக்கும், ஜாதி மத பேதங்களுக்கும் சுதந்தரத்தைககொடுப்பதே தக்க மருந்தாகும். இங்கிலீஷ் பாஷையும் சரித்திரமும் சுதந்தரத்தை வளர்க்கிறது. சுதந்தரத்தை இந்தியர்களுக்கு வழங்கக்கூடாதென்போர் இங்கிலாந்தின் கொள்கைகளே அம்பரத்தில் பறக்கச்செய்வதுடன் அதன் நற்பெயரையும், சரித்திரத்தையும் அவமதிக்கிரூர்கள். இங்கிலீஷ்பாஷையில் அடிமைத்தனம் நல்லதென ஸ்தாபிக்கமுடியாது. இந்தியாவின் கொடுமைக்குக் காரணம் அதன் தரித்திரமே. சென்னேயில் சுபிக்ஷமாய் விளேயுங்காலத்திலேயே சுமார் $2\frac{3}{4}$-கோடி ஜனங்களில் 50 லக்ஷம் ஜனங்களுக்கு உணவுப்பொருள் கிடையாது. அரசாங்க செலவைக் குறைப்பதும் சாஸ்வதமான நிலத் தீர்வையை ஏற்படுத்துவதுமாகிய இரண்டு சீர்திருத்தங்களே தேசத்தின் தரித்திரத்தைக் களேயவல்லது. பெரும்பான்மையான செலவிற்கு இங்கிலீஷ்காரர் உயர்ந்தஜாதியார் என்கிற எண்ணமே காரணம். இதை நாங்கள் வெறுக்கிரூம். சட்டம் கவர்ன்மெண்டு இவைகளின் முன்பாக

ஜாதி நிற பேதங்கள் இறக்கவேண்டும். அன்னிய நாடுகள் இந்தியாவையும் இந்தியர்களையும் இகழ்வது, நாங்கள் எங்கள் தேசத்திலே மிகவும் தாழ்ந்த பதவியை வகித்திருப்பதால் தான்.''

புனவில் "ப்ளேக்" கின் தொந்தரவுகளையும், இராணுவ சிப்பாய்கள் இந்து மூஸல்மான் வீடுகளில் மாதர்கள் வசிக்குமிடங்களிற் புகுந்து செய்த தொந்தரவுகளையும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளின் வாய்ப்பிதற்றலைப் பற்றியும், திலகரைப் பெரும்பான்மையான ஐரோப்பிய ஜூரர்களால் தண்டனையடையச் செய்ததையும் விவரமாக எடுத்துரைத்தார்.

12-வது தீர்மானத்தைப்பிரேரணை செய்யும்பொழுது பாபு சுரேந்தரநாத் பானர்ஜி பின்வருமாறு பேசினர்.

"புனவில் தண்டனைபோலீஸ் வைப்பது பிசகென்று நாங்கள் எண்ணுகிறோம். திலகரையும், புனபத்திரிகாசிரியர்களையும்சிறைப் படுத்தியது அதைவிட பிசகு. திலகரிடத்தில் எனக்கு நிரம்ப விஸ்வாசமுண்டு. தேசம் கண்ணீர் விட்டழுகிறது. இங்கிலீஷ்காரர்கள் மாக்ன கார்ட்டா, ஹேபஸ் கார்பஸ் (சுதந்தரங்களைப்பாதுகாக்கும் சட்டங்கள்) இவைகளை தங்கள் வசமாக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த தத்துவங்கள் இராஜரீக முறையில் அமைக்கப் பெற்றிருகின்றன. இயற்கையாயும் பிரிட்டிஷ் பிரஜைகளா யிருப்பதாலும் எங்களுக்கு அப்பேர்ப்பட்ட சுதந்தரங்கள் உண்டு. எங்களிடத்திலிருந்து அச்சுதந்தரங்களை யார் அபகரிக்கக்கூடும்? கடவுள் ஆதீனத்தின்கீழ் நியாயவரம்பிற்குட்பட்ட சகல வழிகளாலும் நாமும் நம்காங்ரஸூம் நம் பிறப்புரிமைகளைக் காப்பாற்றத் தீர்மானித்து விட்டோம் என்னும் உறுதியானது இந்தியா முழுதும் பரவட்டும். சொத்துக்களையும் பிராணனையும் பாதுகாக்கவேண்டும் என்னும் விதியை அஸ்திபாரமாகக் கொண்டே பிரம்மாண்டமான பிரிட்டிஷ் ஆக்ஷி இந்தியாவில் நிலைநாட்டியிருக்கிறது. ஒரு நிமிஷத்தில் நம்சொத்து நம்மிடத்திலிருந்து பறித்தெடுக்கப்பட்டால், அகாரணமாயும் விசாரணையில்லாமலும் நம்மைக் கைதுசெய்து, மாதக்கணக்காய்ச் சிறையில் வைப்பதானல், பிரிட்டிஷ் ஆக்ஷியின் நன்மைகள் எங்கே போயின? பிரிட்டிஷ் ஆக்ஷியில் சுயேச்சாதிகாரமும் பாது காப்பும் வழங்கப்படுகிற தென்கிற ஜம்பம் என்னமாகிறது?''

சுயேச்சாதிகாரத்திற்காகவும் பகவானல் அளிக்கப்பெற்ற

பிறப்புரிமைகளைப் பாதுகாக்கவுமே இன்னும் எனது மைந்தர்கள் காங்ரஸ் மூலமாய்க் கிளர்ச்சிசெய்து வருகின்றனர்.

14-வது காங்ரஸ் 1898.

[இடம் சென்னை. வரவேற்புக்கமிட்டி அக்ராசனர் N. சுப்பராவ். பிரதிநிதிகள் 614 காங்ரஸ் அக்ராசனர் ஆநந்தமோகன்போஸ்.]

அக்ராசனர் கிளாட்சன் இறந்துவிட்டதைப்பற்றியும், லார்டு கர்சன் வைசிராயாக பம்பாயிக்கு வந்ததைப்பற்றியும் குறித்துச் சொல்லிவிட்டு அரசாங்கமுறைகளின் தவறுகளையும் ஜனங்களின் கஷ்டங்களையும் வெகு விளக்கமாய் எடுத்துக்காட்டி, ஜனங்களின் அக்குகளையும் சௌகர்யங்களையும் அபிவிர்த்திசெய்ய முயல வேணுமேயொழிய, தற்போது ஜனங்களுக்கிருந்துவரும் சொற்ப உரிமைகளையும் இழக்காவண்ணம் அரசுபுரியவேண்டும் என்றூர்.

15-வது காங்ரஸ் 1899.

[இடம் இலக்ஷ்மணபுரி. வரவேற்புக்கமிட்டி அக்ராசனர் பான்சி லால்சிங். பிரதிநிதிகள் 740. காங்ரஸ் அக்ராசனர் ரோமேஷ் சந்த்ரதத்.]

அக்ராசனப்பிரசங்கத்தின் சாராம்சம்:—

இந்தியாவின் தரித்திரத்திற்குக் காரணம் ஜனசங்கியை அதிகமாய்விட்டதல்ல. இங்கிலாந்திலும் ஜர்மனியிலும் இந்தியாவைவிட ஜனசங்கியை அதிகமாய்க்கொண்டுவருகிறது. வெகு சிக்கனமாயும் முன்யோசனையுடனும் வேலைசெய்துவரும் குடியானவனிடத்திலும் குற்றங் கூறுவதற்கில்லை. அவன் அதிக வட்டிக்குக் கடன் வாங்கவேண்டி யிருப்பதற்குக்காரணம் அவனுக்கு உண்பதற்கு ஒன்றும் கிடைக்காமலிருப்பதே. ஆனை அழுத்தக்கூடிய நிலத்தீர்வையும், இந்தியாவின் கைத்தொழில்கள் பாதுகாக்கப்படாமல் இங்கிலீஷ் யந்திரங்களுடன் போட்டிபோட்டு அழிந்து போனதுமே இந்தியர்வின் தரித்திரத்திற்குக் காரணம். மொத்தமாகுலில் $\frac{1}{6}$பாகமே ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னிருந்து தீர்வையாக வசூலிக்கப்படுகிறது. இந்த வழக்கம் அமுலுக்கு வந்தால் பஞ்சம் நீங்கும். இன்னும் பஞ்சத்திற்கு இதர காரணங்களும் உண்டு.

இந்தியர்கள் இந்தியாவிலேயே அந்நியர்களாகக் கருதப்படுகிறார்கள். 3000 வருடங்களுக்கு முன்னமே ஸ்வய ஆக்ஷி செய்துவந்த தேசம் தற்போது போலீஸ்காரர்களின் மூலமாய் ஆளப்படுகிறது. ஜனங்களின் துன்பங்களையும் தரித்திரத்தையும் போக்க சுய ஆக்ஷி அவஸ்யம் கொடுக்கப்படவேண்டும். இது பிரிட்டிஷ் ஆக்ஷியையும் ஸ்திரப்படுத்தும்.

16-வது காங்ரஸ் 1900.

[இடம் லாகூர். வரவேற்புக்கமிட்டி அக்ராசனர் காலி பிரசன்னராய். பிரதிநிதிகள் 567.-அக்ராசனர் N. G. சந்த்ரவர்க்கார்.]

17-வது காங்ரஸ் 1901.

[இடம் கல்கத்தா—வரவேற்புக்கமிட்டி அக்ராசனர் மகாராஜா யகதூர் ஜகதீந்தரநாத். பிரதிநிதிகள் 896.-அக்ராசனர் D. E. வாச்சா.]

வாச்சா கணக்கில் நிபுணர். வெகு அற்புதமான பிரசங்கஞ் செய்தார். என்குறைகளெல்லாம் இதுவரைக்கும் குறிப்பிடப்பட்டிருக்கிறபடியால் மீண்டும் அவைகளை இங்கு குறிப்பிடவில்லை.

18-வது காங்ரஸ் 1902.

[இடம் ஆமதாபாத்து. வ. அ. அம்பலால் தேசாய்.-பிரதிநிதிகள் 471. அக்ராசனர் சுரேந்தரநாத் பானர்ஜி.]

நீண்ட பிரசங்கத்தினிடையே அக்ராசனர் சுதந்தரத்தைப் பற்றி வர்ணிக்கையில் சொல்லியதாவது:— சுதந்தர யுத்தத்தின் வெற்றி ஒருநாளில் கிடைக்காது. சுதந்தரம் என்பது ஒரு தேவதை. அவளைத் திருப்தி செய்வது மிகவும் கஷ்டம். அவள் அன்பர்கள் பக்தி பூர்வமாக நீண்டகாலம் அவளைப் பூசை செய்ய வேண்டும். சரித்திரத்தைப் பாருங்கள். சுதந்தரயுத்தஞ் செய்வதற்கு வேண்டிய பொறுமை தைரியம் தியாகம்— இவைகளை நாம் கிரகிக்க வேண்டும். இவைகளைப்பற்றி நமது தேசத்தாருக்கு நான்சொல்ல வேண்டியது அனாவஸ்யம். இந்துதேச சரித்திரம் தியாகத்தாலும்

திறவுறத்தாலும் எங்கு பார்த்தாலும் எழுதப்பட்டுள்ளது. இந்தியாவைப்போன்ற இன்பத்தைக் கொடுக்கக் கூடியதும் புராதனத்தால் மரியாதையும், சரித்திர சம்பத்துடையதும், மதங்களெனும் செல்வமுடையதும், ஆத்மார்த்தமான நோக்கங்களுடையதும், பூலோக நாகரீகத்தின்மேல் என்றும் அழியாப் பதிப்பையுண்டாக்கிய வேறொருதேசமும் உளதோ? நம் சிஷ்யர்களாகிய சைனா சைபீரியா முதலிய தேசங்கள் நம்மைவிட முன்னேற்ற மடைந்திருக்க நாம் இங்கே யோசனைசெய்துகொண்டு தியாகத்திற்குத்தக்க வெற்றி கிடைத்ததா எனத்தயங்குகிறோம். நாம் அப்படி எண்ணப்படாது. அம்மாதிரி சுதந்தரயுத்தம் ஜெயமடையாது.

19-வது காங்ரஸ் 1903.

[இடம் சென்னை. வ. அ. நவாப் சையத் மகம்மத் சாஹேப் பகதூர். பிரதிநிதிகள் 538. அக்ராசனர் லால்மோகன் கோஷ்.]

லார்டு கர்ஸன் ஆக்ஷியைப்பற்றியும், சுய ஆக்ஷிவேண்டியதின் அவச்யத்தைப்பற்றியும், சுயேச்சையான வர்த்தக முறைகளைக் குறித்தும் இராணுவச்செலவின் கொடுமையையும் நன்குவிளக்கி வெகு அற்புதமான பிரசங்கஞ் செய்தார். காங்ரஸ் அக்ராசனர்களில் முதன்மை ஸ்தானத்தை வகிப்பவர்களில் லால்மோகன்கோஷும் ஒருவர். சிலவிஷயங்களில் இவர் தைரியமும் புத்திசாதுர்யமும் சொல்வன்மையும் இவருக்குமுன் அக்ராசனம் வகித்தவர்களுக்கு இல்லையென்றே துணிந்து கூறலாம்.

20-வது காங்ரஸ் 1904.

[இடம் பம்பாய். வ. அ. சர் P. H. மேதா. பிரதிநிதிகள் 1010 அக்ராசனர், சர். ஹென்ரிகாட்டன்.]

லார்டுகர்ஸன் ஆக்ஷி அடக்குமுறை ஆக்ஷியாய்விட்டது. இந்தியர்களின் அபிலாஷைகளுக்கு அவர் அனுகுணமாயில்லை. ஜனங்கள் எவ்வளவுதான் எதிர்த்தும், பொதுஜன அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாமல் அடக்குமுறைச் சட்டங்களையும் ஆக்ஷி முறைகளையும் அவர் கையாண்டுவந்ததால், ஜனங்களுக்கு அவர்களிடத்திலும் அவர் ஆக்ஷியிலும் வெகு கோபமும் விரோதமும் உண்டாயிற்று. அக்ராசனர் மிஸ்டர் காட்டன் இந்தியக் கிளர்ச்சி

இங்கிலாந்தில் லிபரல் கக்ஷியாருடைய விஸ்வாசத்தைப் பெற வேண்டுமென்றும் சாதிமதநிற பேதங்களால் எவ்விதத்திலும் பேதப்படும் கோடிக்கணக்கான ஜனங்களைச் சில அந்நியர்கள் அடக்கியாள்வது எப்பொழுதும் முடியாதென்றும், ஸ்தல சுயாக்ஷியே நிரந்தரமான ஏற்பாடென்றும், சொல்லி முடித்தார்.

நிர்வாக ஆக்ஷி சம்பந்தமாகவும் உத்தியோகம் படிப்பு, ஜனங்களின் கஷ்டபரிகாரம் ஏனைய விஷயங்களைப்பற்றி விசேஷ தீர்மானங்கள் நிறைவேறின.

21-வது காங்ரஸ் 1905.

[இடம் காசி. வ. அ. முன்ஷி மாதோலால், பிரதிநிதிகள் 758. அக்ராசனர், கோபாலகிருஷ்ண கோகலே.]

லார்டு கர்சன் ஆக்ஷி கொடுமையான ஆக்ஷி என்பதை காங்ரஸ் ரிபோர்ட்டு ஸ்திரப்படுத்துகிறது. அக்கடுமையான காலத்தில் கோகலே அக்ராசனம் வகித்தார். அவர் லார்டு கர்ஸனை அவுரங்கஜீப் சக்கரவர்த்திக்கு ஒப்பிட்டு, அவர் கொள்கைகளைக் கண்டித்தார். படிப்பாளிகளையும் படிப்பற்ற சாமான்ய ஜனங்களையும் விரோதமாகச் செய்த சூழ்ச்சிகளின் வேரை அடியோடு அறுத்தெறிந்தார்.

லார்டு கர்ஸன் செய்த பெரிய அக்ரமங்களில் வங்காளப் பிரிவினையுமொன்று. அதைப்பற்றி "பிரமுகர்களான வங்காளத் தலைவர்களின் அபிப்பிராயத்தை அலக்ஷியஞ் செய்வதாலும், வாயில்லா மிருகங்களைவிடக் கேவலமாக இந்தியர்களை நடத்துவதாலும், இதர தேசங்களும் சந்தோஷத்துடன் மரியாதை செய்யக்கூடிய ஸ்ரீமான்கள் அவமானமும் தைரியமின்மையு மடையும்படி நிர்வகித்தால் பொது ஜனங்களின் நன்மையை யுத்தேசித்து துரைத்தனத்தாருடன் ஒற்றுழைத்த லென்னும் எண்ணத்தை விட்டுவிட வேண்டியது" என்றார்.

சுதேசி இயக்கத்தைப்பற்றி "சுதேசியம் தேசபக்தியின் உருவம். அதைநினைத்தாலும் மனிதன் உடல் பூரித்து ஆனந்தபரவசமடைகிறான். இந்த மகாமந்திரம் பெரியோருக்கும், சிறியோருக்கும், நகரவாசிகளுக்கும், கிராமவாசிகளுக்கும், ஜப்பானிலிருப்பது

போல் இங்கேயும் தேசத்தொண்டே சதாகாலம் நம் மனதில் நிற்கும்படி செய்கிறவரையில் உபதேசிக்கப்படவேண்டும்" என்று சொல்லி அன்னிய சாமான் பகிஷ்காரத்தை, இதர இராஜ முறைகள் பயன்படாவிட்டால், கையாள்வது நியாயம் என்று அபிப்பிராயப்பட்டார்.

கோகலேயின் பிரசங்கமுழுவதும் வெகு இனிமையானது. நியாயத்திலும் மிதவாதத்திலும் பற்றுடையவர். அவர் அரியபிரசங்கத்தைத் தனியாக காங்ரஸ் ரிபோர்டுகளில் படித்தல் உசிதம்.

22-வது காங்ரஸ் 1906.

[இடம் கல்கத்தா. வ. அ. டாக்டர் ராஷ் பேகாரி கோஷ். பிரதிநிதிகள் 1663-அக்ராசனர் தாதாபாய் நவரோஜி.]

வங்காளப்பிரிவினையினால் ஏற்பட்ட சிலகஷ்டங்களை ஈண்டு குறிக்கவேண்டியது அவசியம். இது முதற்கொண்டு காங்ரஸின் மனப்பான்மை மாறுதலடைந்து வந்துகொண்டிருக்கிறது. டாக்டர் ராஷ் பேகாரி கோஷ் தமது பிரசங்கத்தின் இடையே சொன்னதாவது:—

"வங்காளப்பிரிவினை ஏற்பட்டதும் ருஷ்ஷியாவின் ஆக்ஷி முறைகள் அமுலுக்கு வந்தன. அதிலும் ஒரு வித்தியாசமுண்டு. ருஷ்ஷியா ருஷ்ஷியர்களால் ஆளப்பட்டது. இங்கே இந்தியர்கள் இங்கிலீஷ்காரர்களால் ஆளப்பட்டார்கள். தேசீயகீதங்களும் வந்தேமாதர கோஷமும் கூடாதென்று தடைசெய்ததோடு அப்படிச் சொல்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதித்தார்கள். இந்த உத்திரவிற்குப்பிறகு மாணுக்கர்கள் அதிகாரிகள் தொந்திரவுக் காளானுர்கள். சேனைதளவாடங்கள், தண்ட(னை) போலீஸ் பொதுக்கூட்டங்களைத் தடுத்தல், ஜனங்களைத் துரத்துதல் முதலான நியாய வரம்பிற்கு அதிகப்பட்ட செயல்கள் அதிகமாகி பாரிசால் மாகாண கூட்டம் போலீசாரால் கலைக்கப்பட்டு அமைதியைக் காப்பதற்காகப் போலீசார் தேச அமைதியைப் பங்கப்படுத்தினர். நாமெல்லாம் இராஜபக்தியுடையவர்கள். நம் இராஜபக்தியை எளிதில் போக்கடிக்கமுடியாது. எனினும் பாரிசால் கோரசம்பவத்தை நாம் மறக்கமுடியாது. அது என்றைக்கும் நமக்கு வெட்கத்தையும் அவமதிப்பையும் கொடுக்கும்."

சுதேசியத்தைப்பற்றி "சுதேசியம் புதிய இந்தியாவின் தொட்டில். அது இராஜத்துவேஷ இயக்கம் என்பது ஓர்பொய், ஓர் அபாண்டம். நாம் குற்றம் நிறைந்த இங்கிலாந்தை நேசிக்கிறோம். ஆனால் இந்தியாவை அதைவிட அதிகமாக நேசிக்கிறோம். இது இராஜத் துரோகமென்றால், நாங்கள் இராஜத் துரோகிகள் தான் என்று செருக்குடன் கூறுகிறேன்" என்றார்.

தாதாபாய் நவரோஜி அக்ராசனர். தேசபக்த சிகாமணி. இராஜீய சாஸ்திர நிபுணர். இன்னார் பிரசங்கமாரி எவ்விதமாயிருக்கும் என்பதை இவர் இதற்குமுன்செய்த பிரசங்கங்களினால் அறியக் கூடும். இந்தியாவிற்குச் சுதந்தரம்வேண்டும். இந்தியர்கள் இந்தியாவில் செல்வாக்குடன் ஜீவித்தல் அவசியம். உத்தியோகங்களுக்கு இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏககாலத்தல் பரீக்ஷை நடைபெறுவதே நியாயம். கட்டாய இலவசப்படிப்பு வழங்கவேண்டும். இந்தியர்கள்கிளர்ச்சிசெய்து ஒற்றுமையுடன் உழைத்து தேசத்தின் தரித்திரத்தைபோக்கிச் சுதந்தரம்பெற்று, சுகஜீவிகளாயிருக்க வேண்டும். இதுதான் அவர்பிரசங்கத்தின் சாராம்சம்.

23-வது காங்ரஸ் 1907.

23-வது காங்ரஸ் சூரத்தில் கூடிற்று. 1906ல் கல்கத்தா காங்ரஸிலேயே மிதவாதிகள் அமிதவாதிகளென இரண்டு கக்ஷிகள் காங்ரஸில் உதித்தன. இதுமுதல் காங்ரஸ் விவகாரதிசையை யடைந்ததாகவே கூறவேண்டும். இருகக்ஷிகளின் மனோபாவத்தையும் கொள்கைகளையும் கீழேகுறிக்கிறேன்.

கல்கத்தா காங்ரஸ் தீர்மானப்பிரகாரம் டாக்டர் ராஷ்பேகாரி கோஷ் அக்ராசனராகப் பிரேரேபிக்கப்பெற்றாராயினும் லாலா லஜபதிராய் "டிபோர்டேஷனி" லிருந்து அச்சமயம் விடுதலையடைந்திருந்ததால், அவரைக் கஷ்டத்திற்காளாக்கின கவர்ன்மெண்டின் நடத்தையைக்கண்டிப்பதற்காக அவரையே காங்ரஸ் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று பிரேரேபித்தார்கள். ஆனால் லாலா அதை மறுத்துவிட்டார். மற்றொரு வதந்தியும் ஜனங்களுக்கு விசேஷ கோபத்தை யுண்டுபண்ணியது. அதாவது கல்கத்தா காங்ரஸில் நிறைவேறிய சுயஆக்ஷி, பகிஷ்காரம், சுதேசி, தேசீயக்கல்வி ஆகிய இந்நான்கு தீர்மானங்களும் இந்த காங்ரஸில் நிறைவேறாது என்பது. கவர்ன்மெண்டின் அடக்கு

முறைகளுக்குப் பதிலாய் தேசியக்கக்ஷி பலத்த தீர்மானங்களைச் செய்யத் தீர்மானித்து விட்டது. மிதவாதிகளுக்கு அவ்வண்ணஞ் செய்ய இஷ்டமில்லை. இதுவே பிளவிற்குக் காரணம்.

டாக்டர் ராஷ்பேகாரி கோஷ் அக்ராசனம் வகிக்கக்கூடா தென்பது தேசியக் கக்ஷியின் அபிப்பிராயம். அவரை பிரேரணை செய்தகாலத்தில் காங்ரஸ் பந்தலில் கலபை யுண்டாயிற்று. ஆகை யால் காங்ரஸ் ஒதுக்கி வைக்கப்பட்டது. அடுத்த நாள் சுரேந்தர நாத் பண்டித மோடிலால்நேரு டாக்டரை ஆதரிக்க, கோஷ் அக் ராஸனத்திலமர்ந்தார். திலகர் அப்பொழுது மேடைக்குச் சென்று ஓர் திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். காங்ரஸை ஒதுக்கி வைக்கவேண்டும் அல்லது அக்ராசனர் வேறொருவ ரிருக்கவேண் டும் என்பது திலகரின் தீர்மானம். இதற்கு அக்ராசனர் இடங் கொடுக்கவில்லை. மறுபடியும் கலபை. தடியைத்தூக்கிக்கொண்டு பலர் மேடைக்கு ஓடினர். மேதா சுரேந்தரநாத் பேரில் ஒருபெரிய ஜோடு விழுந்தது. காங்ரஸ் ஒதுக்கி வைக்கப்பட்டது. போலீஸ்காரர் சபையோர்களை அப்புறப்படுத்தினர்.

மேதா, கோகலே, வாச்சா, டாக்டர் கோஷ், மாளவியா, V. கிருஷ்ணசாமி அய்யர் இன்னும் பலரும் சேர்ந்து காங்ரஸ் திட்டம் ஒன்று தயாரித்து அதன்படி நடக்கிறவர்கள் அடுத்த நாள் மாலை 1-மணிக்கு பந்தலில் கூடவேண்டும் என்கிற அறிக்கையை வெளி யிட்டார்கள். 900 பிரதிநிதிகள் அதை ஒப்புக்கொண்டு காங்ரஸ் பந்தலுக்குச் சென்றார்கள். மீடிங்கு நடைபெற்றது. காங்ரஸின் விதிகளை தயாரிக்க ஒரு கமிட்டியை நியமித்து அந்தக் கூட்டமும் கலைந்தது. தேசியக்கக்ஷி அதைவிட்டு விலகியது. அது முதல் காங்ரஸ் என்றபெயர் மாறி கன்வென்ஷன் என்ற பெயரால் வருஷாந்தரக்கூட்டம் நடைபெற்றது.

கன்வென்ஷன் 1908ல் சென்னையில் கூடி பல தீர்மானங் கள்செய்து, கலைந்தது.

24-வது காங்ரஸ் 1909.

லாகூரில் கூடியது. பிரதிநிதிகள் 243. வரவேற்புக்கமிட்டி அக்ராசனர் லாலா அரிகிருஷ்ணலால். பண்டித மாளவியா அக் ராசனம் வகித்தார்.

25-வது காங்ரஸ் 1910.

இடம் அலகாபாத். பிரதிநிதிகள் 636. வ. அ. பண்டித சுந்தர லால். அக்ராசனர் சர் வில்லியம் வெட்டர்பர்ன். சூரத்தில் பிரிந்த காங்ரஸ் கக்ஷிகளை ஒன்று சேர்க்க அக்ராசனர் முயன்றார். மனஸ்தாப பேதமானால் ஒன்று சேர்வது எளிது. இரண்டு கக்ஷிகளும் அவரவர்கள் சொல்வதும் செய்வதுமே நியாயமென்று கொள்ளும் போதும், கவர்ன்மெண்டார் இருகக்ஷியையும் கவனியாமல் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும்போதும் அப்படிப்பட்ட அதிகாரிகளிடத்தில் சீர்திருத்தங்களைக் கோரும் மிதவாதிகளைப் பொதுஜனங்கள் ஆதரிக்காமலிருக்கும்பொழுதும், ஒற்றுமை எது? தேசத்திற்கு க்ஷேமம் ஏற்படும்பொழுதுதான் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் மாயும். ஒற்றுமைதோன்றும்.

26-வது காங்ரஸ் 1911.

இடம் கல்கத்தா. வ. அ. பூபேந்திரநாத் பாசு பிரதிநிதிகள் 446. அக்ராசனர் பண்டித பிஷன் நாராயண்தார்.

அக்ராசனர் இந்தியாவின் புதிய உணர்ச்சிக்கு விரோதியாயும் இந்தியாவின் தரித்திரத்திற்கு மூலகாரணமாயுமுள்ளது அதிகாரவர்க்கத்தினரின் குறுகியநோக்கமும் பிரியமற்ற ஆக்ஷியுமே என்றார்.

27-வது காங்ரஸ் 1912.

இடம் பாங்கிபூர். வ. அ. மஜ்ரூல் ஹேக் அக்ராசனர் R. N. மதோல்கார்.

28-வது காங்ரஸ் 1913.

இடம் கராச்சி பிரதிநிதிகள் 550 வ. அ. அரிச்சந்திர விஷின் தாஸ். அக்ராசனர் நவாப் சையத்து மகம்மது பகதூர்.

29-வது காங்ரஸ் 1914.

இடம் சென்னை. பிரதிநிதிகள் 866. வ. அ. சர். S. சுப்பிர மணிய அய்யர். அக்ராசனர் பூபேந்திர நாத் பாசு.

S. சுப்பிரமணிய அய்யர் வழக்கம்போல் தேசத்தின் இடுக் கண்களையும் கவர்ன்மெண்டின் குற்றங்களையும் தொகுத்து, ஓர் ஜாபிதா தயார்செய்யாமல் காங்ரஸ் முக்கியமாய்ச் செய்யவேண்டிய வேலை இன்னதென்பதைத் தெரிவித்தார். ஜமீன்தார்களின் உத வியைப் பெறுதல், கிராம பஞ்சாயத்துக்களை நியமித்தல், ரயத்து களுக்கு உதவிசெய்யச் சங்கங்கள் ஏற்படுத்தல், அன்பால் உலகை நம் வழிக்குத் திருப்புதல் போன்றவைகளைக் குறித்துப்பேசினர்.

அக்ராசனர் பாசு ஐரோப்பிய யுத்தத்தைப் பற்றியும், இந் தியா கவுன்சில் எடுபட்டுப்போக வேண்டுமென்றும், சிவில் உத் தியோகங்களில் 1400-க்கு 70 ஸ்தானங்களே இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், நிர்வாக சபைகளில் ஒரு இந்தியரே யிருப்பதாயும், 9 கவர்ன்மெண்டுகளில் 6 கவர்ன்மெண் டுகளுக்கு ஐ. சி. எஸ் உத்தியோகஸ்தர்களே தலைமை வகித்திருப் பதாயும், அதிகார வர்க்கத்தினர் இந்தியர்கள் முன்னேற்றமடைய யாதொரு நிர்மாண வேலையையுங் காட்டவில்லை என்றும், இந்தி யர்கள் சுயமதிப்பைக் காத்துக்கொள்ள சுதந்தரம் அவசியமென் றும் பிரசங்கஞ் செய்தார்.

இந்த காங்ரஸில் ஸ்ரீமதி அன்னிபெஸண்டு "பரஸ்பர உற வாடல்" என்னும் தீர்மானத்தைப்பற்றிப் பேசினர்.

30-வது காங்ரஸ் 1915.

30-வது காங்ரஸ் பம்பாயில் சர் சத்யேந்திர சின்ஹவின் அக் ராசனத்தின் கீழ் கூடியது. அவர் அக்ராசனப் பிரசங்கத்தில் இந் தியாவை ஓர் வியாதியஸ்தனுக்கு ஒப்பிட்டு சுயராஜ்யம் கிடைக்க இன்னும் காலம் நெருங்கவில்லை என்றும், ஆனல் பிரிட்டிஷ் கவர்ன் மெண்டு இந்தியாவில் எந்த லக்ஷியத்தைக்கொண்டு அரசாள்கிற தென்பதைப்பற்றி ஓர் அறிக்கையை வெளியிட வேண்டிய தவசிய மென்றும் கூறினர்.

இது பிரதிநிதிகள் பலருக்கு அதிருப்தியை விளைவித்தது. தீர்மானங்கள் நிறைவேறும்பொழுது ஸ்ரீமதி அன்னிபெஸண்டு அம்மையார் இந்தியாவை வியாதியஸ்தனுக்கு ஒப்பிடுதல் பிசகென்றும் இந்தியா பலத்தில் ஓர் இராக்ஷசனு(பீமனு)க்குச்சமமானதென்றும், ஆனால் சமீபகாலம் வரையில் தூங்கிக்கொண்டிருந்ததென்றும் இப்பொழுது விழித்துக்கொண்டு தன் உரிமைகளைக் கேட்கிறதென்றும், அதன் எண்ணங்களைத் தடுக்க யாராலு முடியாதென்றும் பெரிய ஆரவாரத்தினிடையே உபந்நியாசித்தார். இதனால் ஜனங்களின் மனோபாவங்க ளின்னதென்றும் அக்ராசனர் சின்ஹாவின் அபிப்பிராயங்களை ஜனங்கள் ஆமோதிக்கவில்லை என்றும் காணக் கிடைக்கிறது.

இந்தக் காங்ரஸுக்குமுன் கோகலேயும் மேதாவும் இறந்துவிட்டார்கள். இவர்கள் காலமானதும் மிதவாதிகள் ஆதிக்கமும் இறந்ததென்று சொல்லலாம்.

31-வது காங்ரஸ் 1916.

30-வது காங்ரஸ் என்னென்ன அரசியல் சீர்திருத்தங்கள் வேண்டுமென்பதை நிர்ணயிக்க ஓர் கமிட்டியை நியமிக்க அதில் காங்ரஸ் சபை முஸ்லீம் லீக் இவைகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். காங்ரஸுக்கும் முஸ்லீம் லீக்கிற்கும் திருப்தியை யுண்டுசெய்யக்கூடிய ஓர் சீர்திருத்த ஜாபிதாவை அவர்கள் தயார் செய்தார்கள். இதற்கு காங்ரஸ் முஸ்லீம் லீக் சீர்திருத்தங்களெனப் பெயர். இவைகள் ஓர் புத்தகத்தில் குறிக்கப்பட்டு, மகாத்மா காந்தியின் யோசனையின்மேல் பொது ஜனங்களின் கையெழுத்தை பின்னால் அப்புத்தகத்தில் வாங்கினார்கள்.

31-வது காங்ரஸ் லக்னோவில் (லக்ஷ்மணபுரியில்) அம்பிகாசாரன் முஜம்தார் அக்ராசனத்தின் கீழ் கூடிற்று. சூரத்து காங்ரஸில் விலகிய திலகர் தேசிய கக்ஷி, கோகலே அன்னிபெஸண்டு நன் முயற்சிகளால் மீண்டும் காங்ரசில் வந்து சேர்ந்து, காங்ரஸ் வலிவடைந்தது. இதைப்பற்றித் திலகர் விநோதமாக "ஐக்கியமாகாணத்தில் நாம் ஐக்கிய மடைந்தோம், லக்னோவில் (லக்—அதிர்ஷ்டம்) நாம் அதிர்ஷ்டத்தை யடைந்தோம்." என்றார். (இடம் லக்னோ. ஆகையால் ஆங்கிலத்தில் லக் என்றால் அதிர்ஷ்டம்.)

இக்காங்ரஸில் காங்ரஸ் முஸ்லீம் லீக் தீர்மானங்கள் நிறைவேறின. தேசீயக் கல்வி இயக்கமும் அங்கீகாரம் பெற்றது. இது முதல் காங்ரஸ் ஐக்கியபர்வமடைந்தது. தேசீயவாதிகளும் மிதவாதிகளும், இந்துக்களும் முகம்மதியர்களும் பெஸண்டு சிஷ்யர்களும் திலகர் சிஷ்யர்களும் சுரேந்தரநாத் பானர்ஜியும் மோடிலால் கோஷும் (அமிர்த பஜார் பத்திரிகை ஆசிரியர்) ஒற்றுமைத்தார்கள். இந்தியாவின் இராஜீய நோக்கம் ஜனநாயக ஆக்ஷி என்றார்கள். ஐரோப்பியர் சம சுதந்தரத்துடன் இந்தியாவில் வசிக்கலாமேயொழிய, அவர்கள் உயர்ந்தவர்களென்றும் இந்தியர்கள் தாழ்ந்தவர்களென்றும் பேத புத்தியுடன் அரசாள முடியாதென்றும் காங்ரஸ் வெளிப்படையாய் என் மக்களனைவருக்கும் உபதேசித்தது. இதுமுதல் காங்ரஸை யாதரிக்கும் பத்திரிகைகளும், புத்தகங்களும், அறிக்கைகளும், உபந்யாசங்களும் ஏராளமாய் விர்த்தியடைந்தன. எல்லா கக்ஷியாரும் பொது ஜனங்களுக்கு அறிவை புகட்ட விசேஷ பிரயத்தனஞ் செய்தார்கள்.

32-வது காங்ரஸ். 1917.

இது கல்க்த்தாவில் ஸ்ரீமதி அன்னிபெஸண்டு அக்ராசனத்தின்கீழ்க்கூடிற்று. 1916-ம்வருஷம் முழுவதும் திலகரும் பெஸண்டும் காங்ரஸுக்காக தீவிரமாய் உழைத்தார்கள். அவர்கள் சரீரமும், நாக்கும், கையும் காங்ரஸ் லீக் கோரிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவதிலேயே ஊக்கமாயிருந்தன. அவர்கள் இருவரும் "ஹோம்ரூல்" சபைகளை ஸ்தாபித்து, ஊக்கமுள்ள தேசாபிமானச் சிறுவர்களையொருங்கே திரட்டி காங்ரஸில் ஆதிக்கம் பெற்றனர். இவர்கள் இருவர்பேரிலும் பிரயாணத்தடை, வாய்ப்பூட்டு, பத்திரிகைகளையடக்கல் போன்ற அடக்குமுறைகள் அதிகார வர்க்கத்தாரால் பிரயோகிக்கப்பட்டன. பெஸண்டின் பத்திரிகையாகிய "நியூ இந்தியா" அச்சுச் சட்டத்தினால் தாக்கப்பட்டு விசேஷ ரொக்க ஜாமீன்கட்டி அதையும் இழந்து, இன்னும் அதிகமாக பணத்தைக் கொடுத்து, கடைசியில் பெஸண்டு, அருண்டேல், வாடியா ஆகிய மூன்று காங்ரஸ் ஊழியர்களும், மதராஸ் கவர்னர் லார்டுபென்ட்லண்டால் அடக்குமுறைச் சட்டத்தின் பலத்தால் சிறையிலிடப்பட்டனர். உடனே சண்டமாருதம்போல் ஓர் கிளர்ச்சி கிளம்பி சுதந்தரப்பிரவாகம் இந்தியா முழுவதும் பாய்ந்து அதிகாரிகளைத் திடுக்கிடச்செய்தது. அவர்களுக்கு அது வெகு கஷ்டமான காலம். ஐரோப்பிய யுத்தம் நெருக்கடியான நிலைமையிலிருந்தபடியால்

ஒன்றுஞ்செய்யத் தோன்றாமல் திகைத்தார்கள். பம்பாயில் விசேஷ காங்ரஸ் கமிட்டி கூட்டம்கூடி சுரேந்தரநாத் ஆதீனத்தில் கவர்ன்மெண்டார் தங்கள் இராஜீயநோக்கத்தின் அறிக்கையை வெளியிட்டு, தேசத்தலைவர்களை விடுதலைசெய்து, காங்ரஸ் லீக் கோரிக்கைகளைப் பூர்த்திசெய்தால் ஆச்சு, இல்லாவிட்டால் பிரிட்டிஷ் சாமான்களை அறவே பகிஷ்காரம்செய்வோம் என்பதாகத் தீர்மானஞ்செய்தனர். உடனே பார்லிமெண்டிலிருந்து 1917௵ ஆகஸ்டு௴ 20-ம் தேதி ஓர் அறிக்கை பிறந்தது. பெஸண்டு, அருண்டேல், வாடியா, விடுதலையடைந்து இந்தியர்களின் கோரிக்கைகளை விசாரிக்க மாண்டகு டெபுடேஷன் இந்தியாவிற்கு வந்தது.

அடக்குமுறைக் கிரையானதால் பெஸண்டிற்கு அக்ராசனப் பதவி கிடைத்தது. காங்ரஸ் லீக் கோரிக்கைகள் ஊர்ஜிதஞ் செய்யப்பெற்று சுயராஜ்யமடைய கால நிர்ணயஞ்செய்து, வெகு குதூகலத்துடன் காங்ரஸ் கலைந்தது.

33-வது காங்ரஸ் 1918.

பம்பாயில் செப்டெம்பர்௴ விசேஷ காங்ரஸ் மாண்டகு-செல்ம்ஸ்போர்டு சீர்திருத்தங்களைக் கவனிக்க சையத் ஹஸன் இமாம் ஆதீனத்தின்கீழ் நடைபெற்றது. பெஸண்டின் காலசக்ரம் மாறிற்று. 'ஷை ரிபோர்ட்டு மிதவாதிகளையும் தேசீய வாதிகளையும் மறுபடியும் பிரித்துவிட்டு பெஸண்டு திலகர் தாஸ் பால் கக்ஷியாருக்குத் திருப்தியைக்கொடுக்கவில்லை. ஆனால் மிதவாதிகள் பூரண திருப்தி யடையாவிட்டாலும் அதைக் கண்டு மகிழ்ந்தனர். பெஸண்டு இரண்டு ஆட்டில் ஊட்டின குட்டிபோலானார். தேசீய மிதவாதமாகிய இருகக்ஷிகளையும் பிரிய வொட்டாமல் தடுத்து, மாண்டகு செல்ம்ஸ்போர்டு ரிபோர்ட்டை மாற்றியமைத்து, எவ்வளவு நன்மை பெறக்கூடுமோ அவ்வளவையும் பெறவேண்டுமென்று பெஸண்டு பிரியப்பட்டார். ஆனால் இருகக்ஷியையும் திருப்திசெய்யப்போனதில் அவர் மதிப்பிழந்து விரோதமடைந்து, காங்ரஸுக்கே விரோதமாய் யுத்தஞ் செய்யவேண்டி வந்தது.

பம்பாய் விசேஷகாங்ரஸில் திலகரும் பெஸண்டும் ஒருவாறாக ஒற்றுழைத்து மாண்டகு செல்ம்ஸ்போர்டு ரிபோர்ட்டைக் கண்டித்து, அதில் கூறியுள்ள இரட்டை ஆக்ஷியே கொடுப்பதா

யிருந்தால் சட்டம், போலீஸ், நியாயம் ஆகிய மூன்று இலாகாக்கள் நீங்கலாக மிகுதிமாகாண அரசாக்ஷிமுழுவதும் இந்தியர் கையில் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டது. இதை மிதவாதிகளிற் சிலரும் தேசீயவாதிகள் முணுமுணுப்புடனும் ஒப்புக்கொண்டார்கள்.

34-வது காங்ரஸ் 1918.

34-வது காங்ரஸ் டெல்லியில் வழக்கம்போல் டிசெம்பர்மீ கூடியது. அக்ராசனர் பண்டித மதன்மோகன் மாளவியா. திலகர் ஷை பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படினும், அவர் சிரோல் மான நஷ்டதாவாவை இங்கிலாந்தில் நடத்தவேண்டி அங்கு சென்றதால் அவருக்குப்பதில் மாளவியா அக்ராசனம் வகித்தார்.

இதில் பூரண மாகாண சுய ஆக்ஷிவேண்டு மென்றும், காங்ரஸ் கோரிக்கைகளையே பார்லிமெண்டு அங்கீகரிக்கவேண்டுமென்றும், மாண்டகு ரிபோர்ட்டு போதுமான சுதந்தரத்தை வழங்கவில்லை என்றும் அது அதிருப்தியானதென்றும் தீர்மானங்கள் நடைபெற்றன. பெஸண்டு பம்பாயில் 4 மாதங்களுக்குமுன் தீர்மானஞ் செய்தபடி சட்டம், போலீஸ், நியாயம் இந்த மூன்று இலாகாவைக் கொஞ்சகாலம் ஒதுக்கி வைக்கலா மென்றும், மிதவாதிகளை காங்ரஸைவிட்டு விலகச்செய்யக் கூடாதென்றும், ஒற்றுமை அவஸ்யமென்றும், பார்லிமெண்டின் மனோபாவத்தையும் இந்தியாவின் இராஜீயக்கக்ஷிகளின் அபிப்பிராயங்களையும் கவனித்து பம்பாய் தீர்மானங்களை ஊர்ஜிதப்படுத்துவதே தகுந்த உபாயமென்றும் தன்னாலானவரையில் மன்றாடியும் அவர் தோற்றுப்போனார். இங்கிலாந்திற்கு டெபுடேஷன் போகிறவர்கள் காங்ரஸ் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றோர் தீர்மானம் C. R. தாஸ் கொண்டுவந்து நிறைவேற்றி விட்டதால் பெஸண்டின் அதிகாரமும் செல்வாக்கும் அஸ்தமித்தது.

L. A. கோவிந்தராகவ அய்யர், N. B. சர்மா, திவான்பகதூர் ராமச்சந்திர ராவ், G. A. நடேசன் போன்ற அமித மிதவாதிகளும் பெஸண்டும் காங்ரஸை விட்டு விலகினர். இத்துடன் நில்லாமல் பெஸண்டால் ஸ்தாபிக்கப்பெற்ற அகிலஇந்திய "ஹோம்ரூல்" சபையிலிருந்தும் அவரை விலக்கி விட்டார்கள்.

35-வது காங்ரஸ் 1919.

அமிர்தஸரஸில் பண்டித மோதிலால்நேருவின் ஆதீனத்தில் நடைபெற்றது. மாண்டகு சீர்திருத்தச்சட்டம் பார்லிமெண்டில் நிறைவேறிற்று. இங்கிலாந்தில் கூட்டுக்கமிட்டி யிடத்தில் சாக்ஷியஞ் சொல்வதற்காக அநேக டெபுடேஷன்கள் சென்றன. காங்ரஸ், மிதவாதிகள், பெஸண்டு நேஷனல் ஹோம்ரூல்லீக், அகில இந்திய ஹோம்ரூல்லீக், திலகர் ஹோம்ரூல்லீக், இன்னும் பலசென்றன. காங்ரஸ் டெபுடேஷன் முயற்சிகள் பலிக்கவில்லை. பெஸண்டும் மிதவாதிகளும் ஒருவாறாக ஜெயித்தார்கள். இந்தியாவின் கக்ஷிச் சண்டையைப் பார்த்து பார்லிமெண்டு சந்தோஷ மடைந்து கையை யழுத்திப் பிடித்தது. மாண்டகு சட்டம் நிறைவேறியதும் மிதவாதிகளும் பெஸண்டும் அதைப்பூஜித்து அதன் பெருமைகளை விளக்கி, இந்தியாவிற்கு க்ஷேமகாலம் உதித்துவிட்ட தென்றார்கள். ஆனால் காங்ரஸ் அதைக் கண்டித்துப் பகிஷ்கரித்தது. இம்மாதிரியான நிலைமையில் பஞ்சாப் படுகொலை நடந்த இடத்தில் காங்ரஸ் கூடினமையால் கவர்ன்மெண்டிடத்தில் ஜனங்களுக்கு ஆருக்கோபம் உண்டாயிற்று. ஆயினும் அரசர்பெருமான் ஸ்ரீமுகத்தை கௌரவித்து மகாத்மாகாந்தி திலகரை நமஸ்கரித்து வேண்டிக் கொண்டதின்பேரில், புதிய சீர்திருத்தச் சட்டத்தை காங்ரஸ் கொள்கைகளுக் கனுகுணமாகப் பிரயோகித்துக் கொள்வதாக ஓர் தீர்மானம் நிறைவேறியது. இந்த காங்ரஸுக்கு மிதவாதிகள் விஜயஞ் செய்யவில்லை கல்கத்தாவில் மிதவாதி கான்பரன்ஸ் பிரத்யேகமாய்க்கூடிற்று. பெஸண்டும் சர்மாவும் தோல்வியுற்று அவர்களும் சீக்கிரத்தில் காங்ரஸிலிருந்து விலகிவிட்டார்கள்.

36-வது காங்ரஸ் 1920.

என் துயரம் மாண்டகு சீர்திருத்தச் சட்டத்தால் நீங்கவில்லை. சுதந்தரம் இழந்ததுடன் இன்னும் இரண்டு இடுக்கண்கள் புதிதாய் தோன்றிவிட்டன. பஞ்சாப் படுகொலையும் கிலாபத் அநீதியும் ஜனங்களின் இருதயத்தைச் சதா பிளந்து கொண்டிருந்தன. அவைகளுக்குப் பரிகாரம் ஏற்படாமையால் மகாத்மாகாந்தி "ஒத்துழைக்காமை" இயக்கத்தை யாரம்பித்தார். இதற்காகவே கல்கத்தாவில் லாலா லஜபதிராய் அக்கிராசனத்தின்கீழ் ஓர் விசேஷ காங்ரஸ் கூடிற்று.

மகாத்மாவின் ஒத்துழைக்காமை இயக்கம் இன்னதென்பது ஜனங்களுக்குத் தெரியும். அதைப்பற்றி இங்கு எழுத இடமில்லை. சுயராஜ்யத்திற்காகவும், பஞ்சாப் கிலாபத் அநீதிக்காகவும் கல்கத்தா காங்ரஸ் மகாத்மாவின் ஒத்துழைக்காமை இயக்கத்தை ஒப்புக்கொண்டது. லாலா, தாஸ், பால், போன்றவர்கள் ஷை இயக்கத்தை எதிர்த்தும் பயன்படவில்லை. மகாத்மா ஜெயமடைந்தார். மாண்டகு சீர்திருத்தச் சட்டம் பகிஷ்கரிக்கப்பட்டது. தேசீய கக்ஷிக்கும் கவர்ன்மெண்டிற்கும் போராட்டம் ஏற்பட்டது. இந்து முஸ்லீம் ஒற்றுமை முன்னிலும் ஐக்கியமாயிற்று.

37-வது காங்ரஸ் 1920.

சேலம் C. விஜயராகவாச்சாரியர் அக்ராசனத்தின்கீழ் 37-வது காங்ரஸ் நாகபுரியில் கூடிற்று. ஒத்துழையாமையை நசுக்க எத்தனங்கொண்டு தேசீயக்கக்ஷியில் பிரபலமானவர் C. விஜயராகவாச்சாரியாரை அக்ராசனராகத்தேர்ந்தெடுத்தனர். ஆயினும் மகாத்மாகாந்திக்கு முன்விரோதமில்லை. அவர்போகிற இடமெல்லாம் வெற்றி. சொல்வதெல்லாம் சத்தியம். அவர் ஆணையிட்டால் கோடிக்கணக்கான பிரஜைகள் அப்படியே நடக்கிறார்கள். அவரை வெல்வதெங்ஙனம்? அது சாத்தியப்படவில்லை. ஆகையால் C. R. தாஸனும் மகாத்மாவும் சம்மதித்து, ஒத்துழைக்காமை இயக்கத்தில் பலரும் வந்து சேரும்படி சில சௌகரியங்களைச் செய்து, ஷை இயக்கத்தை ஸ்திரஞ்செய்து தீர்மானங்கள் நடைபெற்றன. அன்றுமுதல் தேசீயக்கக்ஷி வலிவுற்று அபாரமான இராஜீயக்கிளர்ச்சி நடந்துவருகிறது.

38-வது காங்ரஸ் 1921

இது ஆமதாபாத்தில் நடைபெற்றது. C. R. தாஸ் அக்ராசனராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவர் அடக்குமுறையால் கைது செய்யப்பட்டதால் அவருக்குப் பதில் ஹகீம் அஜ்மல்கான் அக்ராசனம்வகித்தார். ஒத்துழைக்காமை இயக்கம் மீண்டும் அங்கீகரிக்கப்பெற்றது. மகாத்மா காந்தி காங்ரஸ் சர்வாதிகாரியானார்.

அடுத்தகாங்ரஸ் கயையில் கூடும். மகாத்மாவும் சிறையுண்டார். இடுக்கண்கள் இன்னும் நீங்கவில்லை. என் விமோசனம் ...மைந்தர்கள் கையில்தான் இருக்கிறது. அவர்களுக்கு ஆக்க

வும், அழிக்கவும், சம்பாதிக்கவும் தியாகஞ்செய்யவும் கூடும். அவர்கள் ஒற்றுமையுடன் முனைந்து வேலை செய்தால் நான் நற்கதியடைவேன். ஈசன் அருள்புரியவேணும். என் மைந்தர்கள் என்னை நேசிக்கவேண்டும்."

முடிவு.

முதல் மூன்று காங்ரஸ்கள் துரைத்தனத்தாரின் குழந்தையாக விருந்து, இங்கிலாந்தைப் புகழ்ந்து, இந்தியரின் கஷ்டத்தை பயபக்தி விநயத்துடன் புகழ்ச்சியினிடையே தெரிவித்துக் காலக்ஷேபஞ்செய்தன. 4-வது காங்ரஸ் முதல் சூரத்து 23-வது காங்ரஸ்வரையில் மிதவாதிகள் ஆதிக்கம்பெற்று மேதா கோகலேவின் ஆக்ஷியாக இருந்தது. 24-லிருந்து 30-வது காங்ரஸ் வரையில் தேசீயக்கக்ஷி காங்ரஸிலிருந்து விலகி கன்வென்ஷனுய் நடைபெற்றது. 1916ஸூ முதல் 1918ஸூ வரையில் (31 முதல் 34 வரை) தேசீயகாங்ரஸாய் விளங்கி மிதவாதிகளும் தேசீயவாதிகளும் ஏகோபித்து தேசத்தொண்டு புரிந்தார்கள். 35-வது காங்ரஸ் முதல் மகாத்மாகாந்தி காங்ரஸாய்விளங்கி சத்தியம், சமத்வம், சுயநிர்ணயம், சுயராஜ்யம் என்னும் மந்திரங்களை யுபதேசிப்பதுடன் அனுஷ்டானத்திலும் கொண்டுவருகிறது.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

வந்தேமாதரம்.

[திருநாவுக்கரசு பிரஸ், ஆரணி.]

தற்கால புதுமாதிரி நாவல்.

சபேசன்

அல்லது.

சுதந்தர ரக்ஷகன்

V. N. அரங்கசாமி அய்யங்கார் எழுதியது.

படிப்போர்மனதைக் கவரக்கூடியது. சமூகவாழ்க்கையின் சீர்திருத்தங்களையும் சன்மார்க்கத்தையும் தேசமுன்னேக்கத்திற்குவேண்டிய முயற்சிகளையும், அரசியல் விவகாரங்களைக்குறித்து அபிப்பிராய பேதமுடைய அனேக கக்ஷிகளின் வாதங்களையும் தெற்றெனவிளக்குகிறது. ஆணும் பெண்ணும், பெற்றோர்களும் பிள்ளைகளும் கட்டாயம் படிக்கவேண்டிய புஸ்தகம்.

கிரௌன் 80 பக்கங்களுடையது. விலை அணா 0—6—0

7 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்,

திருநாவுக்கரசு அச்சுக்கூடம்,

ஆரணி, (வடஆற்காடு.)

புதிய இங்கிலீஷ் சம்பாஷணைப் புஸ்தகம்.

மூன்றுமாத காலத்திற்குள் இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம், மூன்று பாகங்களடங்கியது. இங்கிலீஷ் வாக்கியங்களுக்கு தமிழ் அர்த்தத்துடனும், ஒவ்வொரு பாடத்தின் அடியில் ஏராளமான அப்பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிய போதனா முறைகளை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. இம் மூன்று புத்தகங்களையும் படித்தால் 4-வது பாரத்தில் படிக்கும் மாணாக்கனை விட அதிகமாக இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம்.

விலை அணா 6. வி. பி. 0—11—0.

ஷை இரண்டாம்பாகம்

விலை அணா 8. வி. பி. 0—14—0.

ஷை மூன்றும்பாகம்

விலை அணா 10 வி. பி. 1—0—0.

☞ வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

திருநாவுக்கரசு அச்சுக்கூடம்,

ஆரணி, (வட ஆற்காடு.)